காஞ்சி



டாக்டர்
மார்டின் லூதர் கிங்

ஆசிரியர்
அண்ணாதுரை

14-8-66

விலை 20 காசு

விடுங்கள் போகிறேன்!

நாடுகள் போய்க் கொண்டிருக்கும் அரசியல் வேகத்தைப் பார்த்தால் 'மான் ஹாட்டன் ஐலண்ட்' என்ற பகுதி நியூயார்க் நகருக்கு அருகில் உள்ளது; அங்கு ஐ. நா. என்ற அமைப்பு இருக்கிறது! என்ற நினைவே மறைந்திருக்குமோ என்றுகூடத்தோன்றுகிறது.

ஏதாவது ஒரு உலகத்தலைவரைத் தடுத்து நிறுத்தி "ஐயா, ஐ. நா. தெரியுமா?" என்று கேட்டால்கூட "ஆமாம், இருக்கிறது; அதற்கென்ன வந்தது இப்போது?" என்ற அசிரத்தையான பதில்; சலிப்பான கேள்வி இவையிரண்டும் கிடைக்கும்.

ஏதோ இருக்கிறது!

ஆண்டுக்கொருமுறை துவக்க நாள் விழாக் கொண்டாடுவதோடு சரி; மற்றபடி அதன் அரசியல் முக்கியத்துவம் நாளுக்கு நாள் மங்கிக் கொண்டு வருகிறது. ஏதோ அதன் துணை அமைப்பு ஒன்றிரண்டு அவை அரசியல் அடிப்படையில் இல்லாத காரணத்தினால்தானோ என்னவோ — ஏதோ இயங்கிக் கொண்டிருக்கின்றன.

சோதனைக்கட்டங்கள் என்பது அந்த உலக அமைப்புக்கு அன்றாட நிகழ்ச்சிகள். அரசியல் பிரச்சனைகள் அவ்வப்போது தீர்த்துவைப்பது சோதனையாய் இருந்ததுபோய் இப்போது அதன் இயக்கமே சோதனைக் கட்டத்தில் வந்து நிற்கிறது.

அந்த மூல அமைப்புக்கு உறுப்புகள் கொடுக்கும் 'பெருமை'யின் மகத்துவம்அப்படி. 'ஐ.நா.தானே' என்ற ஒரு அலட்சிய தொனி!

மூன்றாவதாக தலைவர் பதவிக்கு வந்துள்ள ஊதாண்ட் "தயவு செய்து என்னை விட்டுவிடுங்கள்" என்று கூறுகிறார். காரணம் பதவியின் மீது வந்துவிட்ட வெறுப்பு அல்ல; ஐ. நா. அவையே நாளுக்கு நாள் மதிப்பு இல்லாத நிலையைப் பெற்று வரும்போது நமது தனிப்பட்ட மதிப்பையாவது வெளியே வருவதன் மூலம் காப்பாற்றிக் கொள்வோமே என்ற கடைசி ஆசைதான்!

நடுவரை மதிக்காத போட்டி—அரங்கத்தையே பாதிக்கிற விளையாட்டு இந்த நிலையில் போய்க் கொண்டிருக்கிறது உலக நாடுகளின் அரசியல் இயக்கம்.

மல்யுத்தங்களில் நடுவரே பயமுறுத்தப்படுவதுபோல் — பல கட்டங்களில் தூக்கி வெளியே எறியப்படுவதுபோல் ஐ. நா.வின் தலைவர்கள் வரிசை எத்தனையோ அவமதிப்புகளை — ஏன் உயிர் ஆபத்துக்களைக் கூட—சந்தித்துவிட்டது.

அற்று விழுந்தால்...

குத்துச் சண்டைக்காரர்களின் வேகம் மேடையைப் பாதித்துவிடுவதுபோல மோதிக்கொள்ளும் நாடுகள் ஐ. நா. மன்றத்தையே பதம் பார்க்கின்றன. மேடையின் சுற்றுக் கயிறு பாதிக்கப்படுவதால் தாங்கள் தானே கீழே விழ நேரிடும் என்பதைப் போட்டியாளர்கள் நினைத்துப் பார்ப்பது இல்லை. அப்படித்தான் ஐ. நா. வின் தார்மீகக் கட்டுப்பாடு அற்று விழுந்தால் உலகின் இயக்கமே பாதிக்கப்படுமே என்பதை நாடுகள் தெரிந்திருந்தாலும் உணர்ந்து நடப்பதில்லை.

முன்பெல்லாம் இருந்த நிலையிலிருந்து இப்போது ஒரு மாறுதல் பிறந்திருக்கிறது, ஆமர் ஷீல்ட் காலத்தில் "அவரை அப்புறப் படுத்து" "இன்னொருவர் வரவேண்டும்" என்ற குரலும் அவருக்கு முன்னால் இருந்த 'திக்வ்லீ' காலத்தில் ஒருதலைப் பட்சமாக நடக்கிறார்; தூக்கி யெறிய வேண்டும் என்ற பிரசாரமும் உறுப்பு நாடுகள் சிலவற்றால் கடைப்பிடிக்கப் பட்டன.

இப்போது அந்த குரலே கிடையாது! ஏன் தெரியுமா? இருப்பவரையும் போக விட்டுவிட்டால் வேறு எவரும் இருக்கும் சூழ்நிலைகளில் பதவியை வகிக்கத் தயாராயில்லை!

அந்த அளவுக்கு அமைப்பின் முக்கியத்துவமே பாதிக்கப்பட்டிருக்கிறது.

உலக அரங்கில்

சான்று இல்லையே!

ஊதாண்ட் "விடுங்கள்; போகிறேன்" என்று கூறுவதற்குக்கூட பதவியில் உள்ள வேலைப் பளு காரணமல்ல, பதவி அனுபவித்து வரும் தேய்ந்துவரும் முக்கியத்துவம்; அமைப்பு பெற்றுவரும் அலட்சிய உபசரிப்புகள்!

உலகின் பெரும் நாடுகளை மையமாகக் கொண்ட எந்த சிக்கலும் ஐ. நா. வின் தனிப்பட்ட சாதனையால் தீர்த்துவைக்கப் பட்டது என்பதற்கு இதுவரையில் சான்று கிடையாது. தங்களைப் பாதிக்கும் அல்லது தங்களுக்குள்ளாக இருக்கும் எவ்வித பிரச்சனைகளையும் ஐ. நா. வுக்கு வெளியே நின்றுதான் உலகின் பெரும் சக்திகள் தீர்த்துக்கொண்டிருக்கின்றன.

1962 அக்டோபரில் நடந்த கியூபா பிரச்சனை ஐ. நா. வுக்கு வெளியேதான் தீர்வு காணப்பட்டது.

மதிக்கவில்லை!

1963-ல் உருவான 'அணு ஆயுதத்தடை ஒப்பந்தமும் அப்படியே!

தொடர்ந்து நீடிக்கும் வியட்நாம் போரும் அதே நிலை. ஊதாண்ட் பதவியின்மீதும் அமைப்பின்மீதும் நம்பிக்கை இழந்ததற்கே முக்கிய காரணம் வியட்நாம் போர் ஐ. நா. வைப் புறக்கணித்த நிலையில் போய்க்கொண்டிருக்கிறது என்பது தான் எனக் கூறப்படுகிறது.

அணுகுண்டுகளில், ஆயுதப் பெருக்கங்களில் தேசிய வருவாயின் கணிசமான பகுதியை மரியாதை உணர்வுடன் ஒதுக்கும் பல முக்கிய பெரியநாடுகள் ஐ. நா-வின் இயக்கத்துக்குத் தேவையான நிதியைத் தருவதில் புறக்கணிப்பைக் காட்டுகின்றன. இரஷ்யாவும் பிரான்சும் இல்லாமைகொட்டும் நாடுகளல்லவே! எனினும் ஐ. நா-வுக்கு கைவிரித்தலில் அவையிரண்டும் தான் முன்னணியில்இருக்கின்றன. அமைப்பே 'திவால் என்ற நிலைக்கு வந்துவிடும் என்ற நிலையிலும் ஐ. நா. காங்கோவுக்கு அமைதிகாக்கும் படையை அனுப்பிவைத்தது. ஏதோமற்றநாடுகள் பொறுப்போடாவது தந்த நிதித்தொகைகளினால்தான்!

(16-ம் பக்கம் பார்க்க)

அறிவீனம்!

அறிவீனத்துள் பெரிய அறிவீனம் எது? அறிவாளிகளான பெரியோர்களுடைய சிறப்புத் தெரிந்தும் அதைச் செயல்படுத்தக் கூச்சப்படுவதுதான்!

— டிமாக்ரிடஸ்.

காஞ்சி

மலர் 3 | 14—8—66 | இதழ் 3

நல்லறிவு பரவிட!

விஞ்ஞானப் பேரறிஞர்களின் கட்டுரைத் தொகுப்பு நூலினை வெளியிட்டுப் பாராட்டிய குடிஅரசுத் தலைவர் டாக்டர் **ராதாகிருஷ்ணன்,** அன்றாட வாழ்க்கையிலும், விஞ்ஞான முறைப்படி ஆராய்ந்தறிந்து நடந்துகொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தினார்.

புதுடில்லியில் ஆகஸ்ட்டு ஆறும் நாள் நடைபெற்ற இந்த விழாவில் விஞ்ஞானத் துறையின் வளர்ச்சியால் நாடு முன்னேற்றம் அடைந்துவருவது பற்றி மகிழ்ச்சி தெரிவித்த **டாக்டர் ராதாகிருஷ்ணன்,** நாட்டு மக்களில் பாமரர் என்றழைக்கப்படுவோர் மட்டுமின்றி, படித்தவர்கள் என்ற பட்டியலில் தமது பெயரைப் பொறித்துக் கொண்டுள்ளவர்கள்கூட, கொண்டுள்ள விரும்பத்தகாத மனப்பான்மையைப் பற்றி எண்ணிக்கொண்டிருக்கவேண்டும்.

கல்வித்துறை வித்தகர்களும், விஞ்ஞானத்துறை நிபுணர்களும் பெருகிக்கொண்டு வருகின்றனர் என்றபோதிலும், மூட நம்பிக்கைகளும், முரட்டுப் பிடிவாதங்களும், அழுத்தமாக இன்னும் இருந்துவருவதை அவர் நன்றாக அறிவார்.

அறிவுத் தெளிவையும் ஆராய்ச்சித் திறனையும் அடிப்படையாகக்கொண்டது விஞ்ஞானம் என்றபோதிலும், அந்த விஞ்ஞான வளர்ச்சி, புதுமைப் பொருள் உற்பத்திக்குப் பயன்பட்ட அளவுக்கு மக்களிடம் பகுத்தறிவை வளர்ப்பதற்குப் பயன்படவில்லை என்பதனை அனைவரும் அறிவர். இந்த நிலை நீடிப்பதை எவரும் விரும்பவும் மாட்டார்கள்.

பகுத்தறிவு பரவினாலே, மதம் கெட்டுவிடும், ஒழுக்கம் குன்றிவிடும் என்ற கருத்துப் பிடிப்பிலே உள்ளவர் அல்ல குடிஅரசுத் தலைவர். மாறாக பகுத்தறிவு பரவப் பரவ, மனித குலத்தின் மாண்பும், ஒழுக்கமும் நேர்த்தியானதாகும் என்று தமது பல நூற்களிலே வலியுறுத்தியவர். ஆகவே அவருக்கு, நாட்டினர், ஏட்டின்மூலம் ஒரு கருத்தையும், நடைமுறையில் மற்றோர் கருத்தையும் கொண்டிருப்பது பிடிக்கவில்லை. அதனால்தான், வாழ்க்கையில், அன்றாட நடவடிக்கைகளில், சிந்தனையிலும், செயலிலும், விஞ்ஞான மனப்போக்குடன் நடந்துகொள்ளவேண்டும் என்று தமது பேருரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

நாடுபோற்றிப் படித்துவரும் ஏடுகளிலே காணப்படும் கருத்துக்களுக்கும் நாட்டவர், சாஸ்திரம் — சம்பிரதாயம் — என்பவையின் பேரால் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கும் பொருத்தம் இல்லாதிருப்பது அவருக்கு மன வருத்தத்தைத் தரத்தான் செய்திருக்கும்.

விஞ்ஞான மனப்போக்கு கொள்ளாமல், விஞ்ஞானக் கூடங்களை அமைப்பதும், ஏடுபல படித்து விஞ்ஞான வித்தகர் என்று பட்டம் பெறுவதும், பொருளற்றதாகிப் போய்விடும்.

வாழ்க்கை வசதியைப் பெருக்கிக்கொள்வதற்கான புதுமைப்பொருள் பலவற்றினைப் பெற்றளிக்க மட்டுமே உள்ளது அல்ல விஞ்ஞானம். ஒவ்வொரு செயலையும், கருத்தையும், ஏற்பாட்டினையும், நிகழ்ச்சியையும் ஆராய்ந்து பார்த்து, தக்கன கொண்டு, அல்லன தள்ளி ஒழுகுதற்குப் பயன்படுவதே விஞ்ஞான மனப்போக்கு.

'கிரஹணம்' ஏற்படும் விதம் பற்றிய விஞ்ஞான விளக்கத்தை ஏடுகளிலே படித்து உணர்ந்தான பிறகும், பழய சம்பிரதாயப் பிடிப்புக் காரணமாக கிரஹணத்தன்று சிலபல சடங்குகளை மேற்கொள்வது கேலிக்கூத்தாகும் என்று பகுத்தறிவு இயக்கத்தினர் கூறிடும்போதெல்லாம், இத்தகைய பேச்சும் அதன் தொடர்பான நடவடிக்கையும் மதத்தை அழித்துவிடும் ஒழுக்கத்தைக் குலைத்துவிடும் என்று வாதாடுவோர்களெல்லாம், டாக்டர் ராதாகிருஷ்ணனுடைய பேருரையைக் கருத்தூன்றிப் பார்க்கவேண்டுகிறோம்.

> **There should not be one way of thinking at the time of an eclipse and another at the time of writing down examination papers.**

என்று அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

கிரஹங்களை, விஞ்ஞானிகள் ஆராய்ந்துகொண்டிருக்கும் காலம் இது.

சந்திரமண்டலம் செல்வோம் என்று விஞ்ஞானிகள் அறிவித்துள்ள நாட்களிலே வாழுகின்றோம்.

சந்திரனைப்படமெடுத்து அனுப்ப, 'பறக்கும் கருவி'யை ஏவி அதிலே வெற்றி கண்ட நாட்கள்! இந்த நாட்களிலும், மரத்தடி ஜோதிடனையும், அட்டையில் கிரஹங்களைக் கோடிட்டு அடைத்து ஆரூடம் கூறுவோரையும், மந்திர முடிக்கயிறு தருவோரையும் காணுகின்றோம்; படித்து பட்டம் பெற்றவர்களும் ஏதோ ஒரு மகிமை இருக்கத்தான் செய்யும் என்று பேசுவதையும் கேட்கிறோம்.

இந்த நிலைமை இருப்பதனைத்தான் குடி அரசுத் தலைவர் இடித்துக் காட்டி இருக்கிறார்.

கிரஹணம் ஏற்படுகிற முறைபற்றி, பரிட்சை எழுதும்போது விஞ்ஞான விளக்கத்தை எழுதுகிறீர்கள்-ஆனால் கிரஹணம் பிடிக்கும்போது, ஏதேதோ சடங்குகளிலேஈடுபடுகிறீர்களே, ஏன் விஞ்ஞான அறிவை, மனப்போக்கை உமது அன்றாட நடவடிக்கையிலே மேற்கொள்ளத் தவறுகிறீர்கள் என்ற

கருத்துப்பட, குடி அரசுத்தலைவர் பேசியிருப்பதை வரவேற்றுப் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

பேரரசை நடத்திச் செல்லும் பெரிய அமைச்சர்களை ஆரூடக்காரன் ஆட்டிப்படைக்கின்றான் என்று டில்லி வட்டாரத்தில் பேசிக் கொள்கிறார்கள். இன்னின்ன அமைச்சருக்கு இவரிவர் ஜோதிடர் என்ற விவரம் கூடத் தருகிறார்கள். இன்று அவருக்கு ஆகாத நாளாம், ஆகவே இன்று அவர் அலுவல்களைப் பார்க்கமாட்டாராம் என்றெல்லாம் பேசிடக் கேட்கிறோம்.

இந்த நிலைமைகளெல்லாம் குடி அரசுத் தலைவருக்குத் தெரியாமலிருக்க முடியாது. இந்த நிலைமை நீடிக்கக்கூடாது என்பதனை எடுத்துக் காட்டவே, அன்றாட நடவடிக்கையில் விஞ்ஞானத்தைப் (பகுத்தறிவைப்) பயன்படுத்த வேண்டும் என்ற அறிவுரையை அளித்துள்ளார். நாட்டு மக்களிடம் நல்லறிவு பரவிட, குடி அரசுத்தலைவர் அவர்கள்: இதுபோன்ற தெளிவுரைகளைத் தொடர்ந்து அளித்துவரக் கேட்டுக் கொள்கிறோம்.

❁

அவர்களை ஆள அழைத்தால்!

காங்கிரசுக் கட்சியை மீண்டும் ஆட்சி நடத்திட அனுமதித்தால், ஏழை சிரிப்பான், எங்கும் இன்பம் பொங்கும் என்று சிந்து பாடுவோர் உளர்.

அவர்களை ஆள அழைத்தால், என்ன நடக்கும் என்பதை அறிய நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்காகப் பணம் எப்படித் திரட்டப் போகிறார்கள் என்பது பற்றிய விவரத்தைக் கூர்ந்து பார்த்திடும்படி பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

இப்போது கிடைத்துள்ள தகவலின்படி, நாலாவது ஐந்தாண்டுத்திட்டச் செலவுக்காகப் **புதிதாக** மக்களிடம் **2730 கோடி ரூபாய்** வரி வசூலிக்கப்படும் என்று தெரிகிறது.

இந்தச் 'சுமை'யைத் தாங்கிக் கொள்ள வேண்டி நேரிடும் மீண்டும் காங்கிரஸ் தர்பார் அமைக்கப் பட்டால்.

ஏற்கனவே வரிப்பளுவினால் முதுகெலும்பு முறியும் நிலைக்கு வந்துள்ள ஏழை எளியோர்கள், விதிக்கப் பட இருக்கும் புதிய வரிச்சுமை பற்றியும், அதிலே பெரும்பகுதிப்பளுவைத் தாங்கள் தான் சுமக்கவேண்டி வரும் என்பதையும் மறந்திடலாகாது. பிறகு கை பிசைந்துக்கொள்வதிலோ, கண்கசக்கிக்கொள்வதிலோ பயன் இல்லை. ஓட்டுச்சாவடி போகுமுன், தெளிவு ஏற்பட்டாகவேண்டும். இல்லையென்றால் 2730 கோடி ரூபாய் புதிய வரிப்பளுவைச் சுமந்திட வேண்டியதுதான்.

இந்த 2730 கோடி ரூபாயில் 985 கோடி ரூபாய், மாநிலங்களிலே வரியாகப் பெற்றாக வேண்டும். கிட்டத் தட்ட ஆயிரம் கோடி!

கசக்கிப்பிழிந்திட அவர்கள் வருகிறார்கள்; கொட்டிக் கொடுத்திடத்தக்க நிலையில் ஏ மை ழ க ள் இல்லை. கூறிவிட்டோம், அவர்கள் செய்ய எண்ணுவதை. அவர்களை ஆள அழைத்தால் நடக்க இருப்பது இது என்பதைப் அறிந்து, இத்தனை பெரிய வரிப் பளுவைச் சுமத்தத் துடித்திடுவோர்களிடம் ஆட்சியை ஒப்படைக்கலாமா என்பதனை இன்றே யோசித்து முடிவு எடுத்திட வேண்டுகிறோம்.

காங்கிரசை அரசாள அழைத்தீர்களானால், 2730 கோடி ரூபாய் வரி திரட்டிப் புதிதாகக் கொடுக்கத் தயாராகிவிடவேண்டும்.

முடியுமா என்பதை எண்ணிப்பாருங்கள்; ஓட்டுச் சாவடி போகுமுன், எண்ணிப்பாருங்கள்; அவர்களை ஆள அழைத்தால் என்ன நடந்திடும், எத்தனைப் பெரிய வரிப்பளுவைச் சுமக்கவேண்டி நேரிடும் என்பதுபற்றி, சொன்னோம், சிந்தியுங்கள்!!

❁

"காஞ்சி"

இரண்டாம்

ஆண்டு மலர்

•

அண்ணாவின்

பொன்னோவியங்கள்

பலவோடு

கதை, கட்டுரை,

கவிதை, நாடகம்!

வடிவில்

முன்னணித் தலைவர்கள்

பலப்பல படைத்திருக்கிறார்கள்!

○

படக்கதை, துணுக்குகள் மிகப்பல!!

தயாராகிக்கொண்டிருக்கிறது.

தம்பி

இல்லாமையும் போதாமையுஃ கொட்டிக்கொண்டுள்ள இடத்திலேயே உழன்று கொண்டிருக்கிருயே, வாயேன் சிறிது நேரமாகிலும் 'உல்லாசபுரி' சென்று பார்ப்போம். அண்ணன் என்றல் இப்படி அல்லவா இருக்கவேண்டும், இன்னலைத் துடைத்து இதம் அளித்திட வேண்டும் என்றெல்லாம் எண்ணி அகமகிழ்ச்சியை அளவு கடந்து கொண்டு விடாதே! நான் உன்னை அழைப்பது 'உல்லாசபுரி'யில் இருந்திட அல்ல! பார்த்திட!! கற்பனைக் கண்களால்!

மாளிகைக்கூடம், தம்பி! அதோ அமர்ந்திருக்கிருரே, அவர்தான் பெருநிலக்கிழார் பேயாண்டி! பெயர் என்னமோபால இருக்கிறதே என்று எண்ணிக்கொள்ளாதே; 'சாமி' பெயர்!!

எதிரே அடக்க ஒடுக்கமாக நின்று கணக்கேட்டைப் புரட்டிப் படிக்கிருரே 'காரியஸ்தர்', கவனி.

காஞூர் வரவு ஆறு ஆயிரத்து நானூற்று எழுபது
சீனூர் வரவு எட்டாயிரத்து ஐம்பது.
சோரனூர் வரவு பத்தாயிரத்து எழுநூறு.
கல்லூர் வரவு ஆயிரத்து அறுநூறு.
மாந்தோப்பு குத்தகை வரவு ஐயாயிரத்து ஐநூறு;
சவுக்குத் தோப்பு ஏல வரவு ஏழாயிரத்து நாநூறு.
முந்திரித்தோப்பு குத்தகை வரவு மூன்ருயிரத்து இருநூற்று அறுபது.
ஆகமொத்தம்.........

தம்பி! பேயாண்டி பேசுவதைக் கேள். 'ஆகமொத்தம்' இருக்கட்டும் ஓய்! காஞூர் என்ன இப்படிக் குறைந்துவிட்டது? முந்திரி போனவரும் நாலு இந்த வருடம் மூணு ஆகிவிட்ட காரணம் என்ன? குளே போட இடத்தைக்குத்தகைக்கு விட்ட கணக்கையே காணோம். என்னபெரிய புரட்டு நடக்குது எனறே தெரியவில்லை. தம்பி! காரியஸ்தர், ஏட்டைப் புரட்டுகிருர்; ஏதாவது காரணம் கிடைக்கும்; கூறுவார்; ஐயா சமாதானமாக மாட்டார்; ஏசுவார்; அதைக் கேட்டுக்கொண் டிருப்பானேன், வா, வா! போய்விடலாம்!

சிறகு விரித்து ஆடுவதெல்லாம் மயிலாகுமா!

'உடையவர்' வருவாய் எத்தனை வழிகளிலே பெறுகிருர் என்பதைக் காண வேண்டும் என்பதற்குத்தான் இங்கு அழைத்துவந்தேன். கவனித்தாய் அல்லவா, காஞூர், சீனூர், சோரனூர், கல்லூர், இப்படிப் பல சிற்றூர்களிலே உள்ள நிலபுலத்திலிருந்து வருவாய். மாந்தோப்பு, முந்திரித்தோப்பு, சவுக்குத்தோப்பு இவைகளிலிருந்து வருவாய். வாடகைப் பணம், வட்டிப் பணம், வியாபார இலாபம் இப்படி வேறு வகையிலும் வருவாய். கோயில் கும்பாபிஷேகம் நடத்தியது, தருமகர்த்தா வேலை பார்த்தது, சத்திர நிர்வாகம் போன்ற 'புண்ணிய' காரியத்தின் மூலம்கூட 'வருவாய்' உண்டு. தம்பி!



ஏழையின் வருவாய் எத்தனை வழிகளில்?

நாம் தெரிந்துகொள்ள வேண்டியது, விவரம் அல்ல; அவைகளுடன் பிணைந்துள்ள ஒரு பொது உண்மை;

சீமான் பல வழிகளில் வருவாய் பெறுகிறான் என்பதுதான்.

ஏழைப் பாட்டாளி அதுபோல, சிம்சன் கம்பெனி மூலம் ஆறு ரூபாய், சிவராமன் கடைமூலம் மூன்று ரூபாய், ராம்சேட் மண்டிமூலம் நாலு ரூபாய், சுந்தரம் ஸ்டோர் மூலம் எட்டு ரூபாய், ஆகமொத்தம் கிடைத்த வருமானம்.....என்று கணக்குக்கூற முடியாதல்லவா? அவன் பெறக்கூடிய வருவாய், இவைகளிலே ஏதாவது ஒரு இடத்தில் மட்டுந்தான்; அதுவும் வேலை நிலைத்திருந்தால்.

ஏழைக்கு வருவாய் உழைக்கும் இடம் ஒன்றில் இருந்து மட்டுமேகிடைக்கும்.

சீமானுக்கு வருவாய் பல இடங்களிலிருந்து கிடைக்கும்.

ஏழைக்கும் சீமானுக்கும் ஒரேவயிறுதான்; அதிலே வித்தியாசம் இல்லை.

ஆனால் வருவாய்த்துறை ஏழைக்கு பல இருப்பதில்லை; சீமானுக்குப் பலப் பல.

ஆகவே ஏழை உழைக்கிறான் பிழைத்திருக்க!

சீமான், மேலும் சீமானாகிறான், பணம் குவிகிறது; குவிந்த பணம் சீமானுக்குப் புதுப்புது வருவாய்த் துறைகளைப் பெற்றுத் தருகிறது.

கானூர் நிலத்திலே கிடைத்த வருவாய் குவியக் குவிய, சீனூரில் புதிதாக நிலம் வாங்க முடிந்தது—சீமானால். கானூரில் இவருடைய நிலத்தை உழுதுகொண்டிருக்கிறானே, அவனுக்கு இவர் மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டு அவன் பெற முடிந்தது என்ன? கேட்டுப் பார்த்தால், கண் கலங்குவாய்! 'அவளுக்கு ஆஸ்த்துமா! எனக்குக் குடல்நோய்! என்தாயாருக்கு முடக்கு வியாதி! பிள்ளையா? அதைப் பற்றிக் கேட்க வேண்டாமய்யா, அது எனக்குப் பிள்ளை அல்ல, என்னைச் சாகடிக்க வந்துள்ள எமன்!!'—என்று சொல்லிப் புலம்புவான்.

கானூர் நிலத்தை வாங்கிய வேளை நல்ல வேளைங்க ......அதற்குப் பிறகுதான், பகவானுடை கடாட்சத்தாலே, முந்திரித் தோப்பும், மாந்தோப்பும் கிடைச்சுது என்று 'அம்மா' பேசுவார்கள், 'ஐயா' சந்தோஷமாக இருக்கும்போது.

அங்கே பணம், பணத்தைப் பெற்றுத் தருகிறது.

இங்கே (ஏழையிடம்) உழைப்பு உடலை வாட்டி, உள்ளத்தைக் கசக்கிப் போடுகிறது.

அங்கே, செலவு போக இருந்திடும் மிச்சம் முந்திரித்தோப்பாக, மூன்றடுக்கு மாடியாக மாறுகிறது.

இங்கே உழைத்து உழைத்து உருக்குலைந்ததன் பலன், காசம், குன்மம், கடன், இப்படி.

இந்த நிலை, சமூகத்திலே பெரும் அளவு பரவி இருக்கும் கொடுமையை நீக்கினாலொழிய மனித குலம் நிம்மதியாக வாழ்ந்திட முடியாது என்பதனை, உணர்ந்ததன் விளைவு தந்த திட்டந்தான் சோஷியலிசம்.

ஏழை—பணக்காரன் பேதத்தைப் போக்கியாக வேண்டுமானால் ஏழை—பணக்காரன் பேதம் எப்படி ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்தாக வேண்டும்.

ஏழ்மை ஒரு நோய்; அது யாரைப் பிடித்துக் கொள்கிறதோ அவனை மட்டுமல்ல, அவனைச் சூழ உள்ளவர்களை, அவன் உலவும் சமூகத்தையே பிடித்துக் கொள்வது; ஒட்டுவார் ஒட்டி! ஆகவே அந்த நோயைப் போக்குவது, அவனிடம் பரிவும் பச்சாதாபமும் காட்ட வேண்டும் என்பதற்காக மட்டும் அல்ல; அவனைப் பிடித்துக்கொண்டுள்ள நோய் மூலம் கிளம்பிப் பரவிடும் கிருமிகள், சமூகத்தின் நல்லவைகள் யாவற்றையும் அரித்து அழித்துவிடும்; அந்த நோயைத் தடுத்தாக வேண்டும் என்பதற்காக; சமூகத்தைக் காப்பாற்ற; எதிர்காலத்தைப் பாதுகாத்திட!

கானூருக்கும் சீனூருக்கும் சொந்தம் கொண்டாடும் சீமானுக்கும் அவரிடம் கைகட்டி வாய் பொத்தி வேலை செய்யும் பாட்டாளிக்கும், பஞ்சம், பிணி, குழப்பம், கலகம், போர் போன்ற விபத்துக்கள் ஒரே விதமான இன்னலையும் இழப்பையும் தான் தரும், ஐயமில்லை.

ஆனால், 'உடையவர்' அந்த விபத்துக்களைத் தாங்கிக்கொள்ள முடிகின்ற அளவுக்கு உழைப்பாளியால் முடிவதில்லை.

அதனால்தான் பணம் படைத்தவர்கள் பல்வேறு விதமான அரசியல் மாறுதல்களையும், அதிர்ச்சி தரத்தக்க மாறுதல்களையும் தாங்கிக் கொண்ட பிறகும், 'சகஜ' நிலைமை ஏற்பட்டதும், மெள்ள மெள்ள, தங்களின் பழைய நிலையைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இந்தப் பொதுவிதிக்கு, சில குறிப்பிடத்தக்க விலக்குகள் இருக்கலாம்; இருக்கின்றன. ஆனால் பொதுவான உண்மை என்னவென்றால்,

பணம், பயங்கரமான விபத்துக்களையும் தாங்கிக் கொள்ளச் செய்திடும் கேடயமாக, பணக்காரர்களுக்குப் பயன்படுகிறது.

அதிலும், அரசியல் சூழ்நிலையில் ஏற்படும் மாறுதல்கள் கேடு பயப்பனவாக இருந்திடின், அந்தக் கேடுகளின் முழுத் தாக்குதல், ஏழையின்மீதுதான் விழும்; பணக்காரனைத் தாக்கிடக் கிளம்பிடும், அவன் பணம் எனும் கேடயம் கொண்டு தடுத்துக் கொள்கிறான்.

இந்தியாவின் வரலாற்றிலே இதற்கான சான்றுகளை நிரம்பக் காணலாம்.

புலித்தோல் அணிந்தால் போதுமா தகுதி?

வெள்ளையர் வந்தனர்; சிற்றரசர்களும், சீமான்களும், போர்ச் சூழ்நிலை காரணமாக அல்லற்பட்டனர்; ஆனால் விரைவிலேயே நிலைமை அவர்களுக்குச் சாதகமாக அமைந்துவிட்டது. எதிர்த்து நிற்க முடியாது— என்பதைக் கண்டுகொண்ட -- சீமான்கள், வெள்ளையரை 'எஜமானர்கள்' என்று ஒப்புக்கொண்டனர்; அந்தச் சரணாகதியை ஏற்றுக்கொண்ட வெள்ளை அரசு, சீமான்களைத் தமது கொலுப் பொம்மைகள் ஆக்கிக் கொண்டது; அந்தக் கொலுப் பொம்மைகள், எப்போதும்போல, கோலாகல வாழ்வு நடாத்தவும், கானார் வரவு என்ன? வானார் வரவு என்ன என்ற கணக்குப் பார்க்கவும், ஏழைகளின் உழைப்பை மிரட்டிப் பெற்றுக்கொள்ளவும் முடிந்தது. வெள்ளை அரசு அதனை அனுமதித்தது!!

பணம் படைத்தவர்கள் எந்த அரசு அமைந்திடினும் அதனைத் தமக்குச் சொந்தமுள்ள அரசு ஆக்கிக் கொள்வர்; தமது பண பலத்தைக் காப்பாற்றிக் கொள்ள.

இந்த நிலைமை, வெள்ளை அரசு அமைத்ததோடு முடிந்துவிடவில்லை.

காங்கிரஸ் அரசு அமைந்ததும், அதே சீமான்கள், அந்த அரசைத் தமக்குச் சொந்தமுள்ள அரசு ஆக ஆக்கிக் கொண்டு விட்டுள்ளனர்.

சான்று வேண்டிடுவோர் தத்தமது வட்டாரத்தில் உள்ள 'பெரிய புள்ளிகள்' இன்று எந்தக் கட்சியில் இடம் பெற்றுள்ளனர் என்பதனைக் கணக்கெடுத்தாலே போதும்.

முதலமைச்சர் இருக்கிறாரே பக்தவத்சலனார், அவருடைய குடும்பத்தினரே, 'நவாப்' காலத்திலே 'மானியம்' வாங்கிய குடும்பமாம்! விவரம் கேட்கிறாயா, தம்பி! விசாரித்துச் சொல்கிறேன்.

ராமநாதபுரம் ராஜா குடும்பம் இருக்கிறதே, 'சேதுபதிகள்' வெள்ளையர் காலத்திலும் இதே செல்வாக்குதான்; ராஜாக்களையும் ஜெமீன்தாரர்களையும் ஒழித்துவிட்டதாகக் கூறிக்கொள்ளும் காங்கிரஸ் அரசின்போதும் அதேசெல்வாக்குதான்!

வெள்ளைக்காரன் கூட, சேதுபதிகளை, ராமநாதபுரம் ராஜாவாக மட்டுமே இருக்கச் செய்தான்.

காங்கிரசாட்சியிலேதான் ராமநாதபுரம் ராஜா, தமிழ்நாடு முழுவதற்கும் 'மந்திரி'யாகி ஆட்சி நடத்தினார்.

சிவகங்கை ராஜா குடும்பம் அதே நிலைமை!

செட்டி நாட்டு ராஜா குடும்பம்? அதே நிலைமை!!

வெள்ளையர் ஆண்டபோது, எப்படி அவர்கள் இந்தப் பெரிய புள்ளிகளைத் தமது கொலுமண்டபத்தில் இடம் கொடுத்து, துணைக்கு, துதி பாடவும் வைத்துக் கொண்டிருந்தனரோ, அது போலவேதான், காங்கிரஸ் ஆட்சியும் பெரிய புள்ளிகளைத் தமது நண்பர்கள் ஆக்கிக்கொண்டுவிட்டிருக்கிறது.

பணம் படைத்தவர்களை எந்த அரசும், தனது பரிவாரத்தினர் ஆக்கிக் கொள்ளும் என்பதும், இந்த எழுதாத ஒப்பந்தம் இன்று நேற்றல்ல, நெடுங் காலமாக இருந்து வருகிறது என்பதையும் உணர்ந்திடின் இன்றைய அரசியல் நிலைமை நன்கு விளங்கும்.

காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்துவது என்பது, ஆராய்ந்து பார்க்கும்போது, இதற்கு முன்பு அமைந்திருந்த ஆட்சிகளின்போது, அந்தச் சீமான்கள் — பெரியபுள்ளிகள் — செல்வாக்குப் பெற்று வந்திருந்தனரோ, அதே திருக்கூட்டத்தார், தமது நிலைமையை உறுதிப்படுத்திக்கொள்ளவும், வாழ்வை வளமாக்கிக் கொள்ளவும் நடத்தப்பட்டுவரும் ஆட்சி என்பது புரிகிறது. அதனால்தான், நாம் அந்த ஆட்சியை மாற்றியாகவேண்டும் என்கிறோம்.

புலித்தோல்மீது அமர்ந்து கண்களை மூடிக்கொள்வதாலேயே, முன்னாள் வழிப்பறிக்காரன், யோகி ஆகிவிடமுடியாது.

சிலகாலம், விவரம் தெரியாதவர்கள் மயங்கிக் கிடக்கலாம்.

எல்லோரும் ஏமாளிகளாகிவிடமாட்டார்கள்.

ஏமாளிகளாகிவிடுவபர்களும் கடைசி வரையில் விழித்துக்கொள்ளமாட்டார்கள் என்று எண்ணுவதும் பேதமை.

இனிப் பொறுப்பதில்லை

இன்றுவரும் நாளைவரும் நன்மை என்றே
இன்னுயிரை உடலுக்குள் காத்து வந்தோம்
ஒன்றுவிடா மல்வரியும் கொட்டி வந்தோம்
உதயம்வரும் எனக்கிழக்கைப் பார்த்தி ருந்தோம்
என்றுமுள ஏழையரோ உயர வில்லை
என்னின்முனை அளவேனும் சிறக்க வில்லை
நன்றுபண முடையோரோ உயர்ந்தார் மேலும்
நமதாட்சி என்றிதனைச் சொல்லப் போமோ?

வாழ்வுயரும் வாழ்வுயரும் என்று பார்த்தோம்
வரவழைப்போம் 'சோசலிசம்' வாழ்வில் என்றார்
கேழ்வரகில் நெய்வடியும் என்றே எத்தன்
கூறியதை நம்பிவந்தோம் இனிமேல் நாட்டைப்
பாழ்படுத்தி விட்டவரின் கையில் ஆட்சிப்
பொறுப்பினையே கொடுத்துவிடப் போவ தில்லை
சூழ்கதிரோ(டு) உதித்துவந்து ஒளிகொ டுக்கும்
சுடர்உதய சூரியனை வரவேற் போமே!

'வாழ்வுயர வேண்டும்'என்றோம் ஆட்சி யாளர்
விலைவாசி உயர்த்திவிட்டார்! 'ஆட்சி யோரே
வாழ்வினிலே நலம்பெருகச் செய்வீர்' என்றோம்
வகையாகக் கடன்சுமைதான் பெருக வைத்தார்
பாழ்பட்டுப் போனதடா நமது வாழ்க்கை
பொறுத்திருப்ப(து) இனிஇல்லை! இன்னும் இங்கே
ஏழெட்டு மாதத்தில் உனக்கோர் வாய்ப்பு
ஏழையரின் கழகத்தை ஆள வைப்போம்!

—ஆனந்தவள்ளல்.

உயர்ந்தவர் தாழ்ந்தவர் 'ஓட்டி'லில்லையாம்!

அந்த விழிப்புணர்ச்சியை, தமிழகத்தைப் பொறுத்த வரையில், ஏற்படுத்துவதிலே நமது கழகத்துக்குச் சிறப்பான, பெரும் பங்கு உண்டு-அந்தப்பெருமைக்கு முழு உரிமைபெற்ற உன்னைத் தம்பியாய்க் கொண்டதனால் நான் மகிழ்ச்சிகொள்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சி என்பது கனதனவான்களின் ஆட்சிதான் என்பதை மக்கள் உணரத் தலைப்பட்டுவிட்டார்கள் என்றவுடன்தான், காங்கிரஸ் கட்சி, எங்களைச் சாமான்யமாக எண்ணிவிடாதீர்கள், நாங்கள் ஏழை பணக்காரன் வித்தியாசத்தை ஒழிக்கப்போகிறோம்; சோஷியலிசம் கொண்டுவரப்போகிறோம் என்று அறிவிக்கிறார்கள்.

தம்பி! நான் உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, ஒரு வேடிக்கை நடைபெற்றது.

அன்னியச் சாமான்களை விலக்குவது என்ற திட்டம் மும்முரமாகப் பரவிய நேரம்.

குறிப்பாக அன்னிய ஆலைத் துணிகளைப் போட்டுக்கொளுத்தும் திட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த நேரம்.

என் நண்பன் ஒருவன், 'சிகரட்' பிடிப்பவன்; முன்பு மறைவாகப் பிடித்துவந்தவன், தைரியமாக நாலுபேருக்கு முன்பாகவே சிகரட் பற்றவைக்கத் தொடங்கினான்.

திடுக்கிட்டுப்போனவர்கள் அந்த நண்பனைக் கேட்டார்கள், இப்படிச் செய்யலாமா? என்று.

ஒரு குறும்புப் புன்னகையுடன் அந்த நண்பன் சொன்னான், "நான் என்னசெய்கிறேன் என்று எண்ணிக்கொண்டீர்கள்? நான் அன்னியச் சாமானைக் கொளுத்துகிறேன்; இது இங்கிலாந்து நாட்டுச் சிகரட்டு; இதைக் கொளுத்தித் தள்ளுகிறேன்" என்றான்.

இது வேடிக்கை நிகழ்ச்சி! காங்கிரஸ் கட்சியோ, ஏழை பணக்காரன் பேதத்தை ஒழித்துக்கட்டுகிறோம்; எப்படி என்றால், ஏழை பணக்காரன் இருவரையும் 'ஓட்டர்கள்' ஆக்கி, அந்த ஓட்டுகளிலே, இது ஏழையின் ஓட்டு, இது பணக்காரன் ஓட்டு என்று பாகுபாடு பார்க்காமல், இரண்டுபேர்களுடைய ஓட்டுகளையும் கேட்டு வாங்கிக்கொள்கிறோம்; பேதத்தை ஒழிக்கிறோம் என்று வாதாடும்போல இருக்கிறது.

யார் தங்கள் செல்வத்தையும் செல்வாக்கையும் கெட்டிப்படுத்திக்கொள்ள காங்கிரஸ் கட்சியிலே புகுந்துகொண்டுள்ளனரோ, அந்தப் பெரிய புள்ளிகளைக் கொலுமண்டபத்திலே வைத்துக்கொண்டே ஏழை—பணக்காரன் வித்தியாசத்தை ஒழிக்கப்போகிறோம் என்று பேசுவது, **காளையைக் காட்டி கலம் பால் கறந்து தருகிறேன் என்று கூறுவதற்கு ஒப்பானதாகும்.**

தம்பி! குள்ளர்களை ஒழிக்கப் போகிறேன் என்று நான் பேசினால் எப்படி இருக்கும். உறுதி! உறுதி! உறுதி! காங்கிரஸ் கொள்கையிலே நாங்கள் உறுதியாக நிற்போம் என்று 'புகுந்தவர்கள்' முழக்கமிட்டால் எப்படி இருக்கும்; கேட்க! தாடி ஒழிப்புச் சங்கத்தைப் பெரியாரும், மீசை ஒழிப்புச் சங்கத்தை நண்பர் ம. பொ. சிவஞானமும் துவக்கினால் எப்படி இருக்கும்; தாடியும் மீசையும் இப்போது உள்ளபடியே வைத்துக்கொண்டு. காங்கிரஸ் கட்சி ஊரில் உள்ள எல்லாப் பெரிய புள்ளிகளையும் உடன் வைத்துக்கொண்டு, நாங்கள் சோஷியலிசம் கொண்டு வரப் போகிறோம் என்று பேசுவதை நினைக்கும்போது, எனக்கு இவ்விதமெல்லாம் தோன்றுகிறது.

ஆனால் பேசுகிறார்களே தம்பி! துணிந்து! நாடு கேட்டுக்கொள்ளும், ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கிறார்களே!! எதனால்? எதைச் சொன்னாலும் கேட்டுக்கொள்ளும் இயல்பினர் நாட்டிலே ஏராளமானவர்கள் உள்ளனர் என்ற எண்ணம். ஆனால் நாடு இன்று அவ்விதமாகவா இருக்கிறது? நாட்டு நிலையை நன்கு பார்க்கிறாயே, தம்பி! எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளும் நிலையிலா நாட்டவர் உள்ளனர்? இல்லையே! மக்களின் கண்களே கேள்விக் குறிகளாக அல்லவா உள்ளன!!

முதலாளிகளை ஒழிப்பதுதான் சோஷியலிசம் என்று கருதாதீர்கள், அவர்களையும் வாழவிட்டு, ஏழையையும் வாழ வைப்பதுதான், எங்கள் சோஷியலிசம் என்று விசித்திரமாக வாதாடுகிறார்கள்.

வாதிக்கும் வெற்றி கிடைக்கவேண்டும் பிரதிவாதிக்கும் தோல்வி ஏற்படக்கூடாது என்கிறார்கள்.

முட்டையும் உடையக்கூடாது அடையும் சுட்டாகவேண்டும் என்கிறார்கள்!

புயலும் அடிக்கவேண்டும் மரமும் விழக் கூடாது என்கிறார்கள்!

பணம் படைத்தவர்களும், பணம் திரட்டிக் குவிப்பவர்களும் இருப்பார்கள்; ஏழையும் நிம்மதியான வாழ்வு பெறுவான் என்கிறார்கள்!

பணக்காரர்கள் என்று சமூகத்தில் ஒரு பகுதியினரும், ஏழைகள் என்று மற்றோர் பகுதியினரும் இருக்கும் நிலைமை சோஷியலிசம் ஆகாது.

ஆனால் இதைத்தான் சோஷியலிசம் என்று காங்கிரஸ் கட்சி பேசுகிறது.

திருப்பதி செல்லும் பஜனைக் கோஷ்டியும் கோவிந்தா! கோவிந்தா! என்று முழக்கம் எழுப்புகிறது.

பிணத்தைச் சுமந்து செல்லும்போதும் கோவிந்தா! கோவிந்தா! என்று கூச்சல் எழுப்புகிறார்கள்.

இரண்டு நிலைமைகளின் போதும், "கோவிந்தா!" கேட்கிறது, ஆனால் அந்த இரண்டு 'கோவிந்தா'வும் ஒன்றா?

அறியாமை நீக்கி அறிவு தரவேண்டாமோ?

அதுபோலத்தான், சமூகத்திலே ஒரு பகுதி பணம்படைத்தோர்களாகவும், பெரும் பகுதியினர் வாழமுடியாமல் தத்தளிக்கும் ஏழைகளாகவும் இருக்கக் கூடாது இந்த நிலைமையை மாற்றியாகவேண்டும் என்ற புரட்சித் திட்டம் மேற்கொள்பவர்களும், சோஷியலிசம் பேசுகிறார்கள்.

பணக்காரர்கள் இருக்கத்தான் செய்வார்கள், சிலர் பணம் திரட்டுவது நடந்து கொண்டுதான் இருக்கும், அதனை அனுமதித்துக்கொண்டுதான் இருப்போம், ஆனால் ஏழைக்கும் நல்லது செய்வோம், வாழ்வு கொடுப்போம் என்று பேசும், பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற போக்கினராக உள்ள காங்கிரஸ் கட்சியினரும் சோஷியலிசம் பேசுகிறார்கள்!

இந்த இருவகை சோஷியலிசப் பேச்சில், எது பொருள் உள்ளது, பயன் தருவது, நேர்மையானது என்பதுதான் நாட்டின் முன் உள்ள கேள்வி.

காடும் மேடும் கழனியாக வேண்டுமானால், கள்ளியும் முள்ளும் களைந்தெறியப்பட்டாக வேண்டும், மேடு பள்ளம் சமமாக்கப்பட வேண்டும்.

ஒழுங்குபடுத்தப்பட்ட 'பள்ளம்' பயன்படும்; குளமாக, குட்டையாக.

சமப்படுத்தப்பட்ட இடம் வயலாகும்; விளைச்சல் இடமாகும்.

எமது வயலில் ஆங்காங்கு சிறு சிறு பள்ளங்களும் இருக்கும், கேடுகளும் இருக்கும், ஒருபுறம் கள்ளி கிடக்கும், மற்றோர் புறம் புற்றும் இருக்கும் அதிலே பாம்பும் இருக்கும், வேறோர்புறம் புதர் இருக்கும். அதிலே நரியாவது இருக்கும், சேறு இருக்கும், அதிலே எருமை புரளும், இந்தச் சூழ் நிலையிலும், விளைச்சல் மட்டும் அமோகமாகக்கிடைக்கும். அப்படிப்பட்ட அற்புதமான வயல் எம்முடையது என்கிறார்கள் காங்கிரஸ் கட்சியினர்.

இன்று உள்ள முறைப்படி சமூகத்தில் பணக்காரர்களும் இருப்பார்கள், அவர்கள் பணம் தேடிட குவித்திட, சேமித்திட, உரிமையும் இருக்கும், அதே போது ஏழைக்கு வாழ்வும் உயரும் என்பது, சோஷியலிசம் அல்ல என்பது மட்டுமல்ல, தம்பி! அது நடைமுறைக்கு வர இயலாததுமாகும்.

ஏழைகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட வேண்டுமானால், அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்காகத் தேவைப்படும் பணம், நாட்டின் பொது வருவாயில் இருந்துதான் எடுத்தாக வேண்டும். நாட்டின் பொது வருவாயை தமக்காக என்று பணக்காரர்கள் மடக்கிக் கொள்ளுகிற வரையில் ஏழையின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வாழ்வைச் செம்மைப்படுத்துவதற்குத் தேவைப்படும் பணம் கிடைக்காது.

காங்கிரஸ் ஆட்சியோ பணக்காரர்கள் செல்வம் தேடிடும் உரிமையை இழக்கமாட்டார்கள் என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டிருக்கிறது.

அப்படியானால், ஏழையின் வாழ்வை வளப்படுத்தத் தேவைப்படும் பணம் எங்கிருந்து கிடைக்கும்?

விளக்கம் காணோம். கேட்டால் கோபம் தான் பொத்துக்கொண்டு வருகிறது.

ஏழையை வாழவைக்கப் போகிறோம், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் போகிறோம், நாட்டிலே பல்வேறு துறைகளிலே உற்பத்தியாகும் செல்வம், அதற்கே பயன்படும் என்று பேசுவது, நடைமுறைக்கு வர வேண்டுமானால், அந்தச் செல்வத்தைச் சிலர் தமதாக்கிக்கொள்ளும் முறை மாற்றப்பட்டாக வேண்டும்.

அந்த முறையை மாற்றாமல், ஏழையை வாழ வைக்கப் போகிறோம் என்று பேசுகின்றனர் காங்கிரசார்.

இந்தப் பேச்சு புதுமையானது, புரட்சிகரமானது என்றும் புகழ்ந்து பேசிடச் சிலர் உளர்; சீமான் கொட்டாவிவிட்டு எழுப்பும் சத்தத்திலேயே 'சங்கீதம்' கேட்பதாகத் துதி பாடிக் காசு தேடும் 'தின்று தீர்த்தான்கள்' போன்றோர்.

எல்லோரும் வாழவேண்டும் என்ற பேச்சுக்கா, பஞ்சம்! அதை எப்படி நடைமுறையாக்குவது என்பதுபற்றிய செயலுக்குத்தானே தொடர்ந்து பஞ்சம் இருந்து வருகிறது.

"Our task is to use rightly and to best advantage her great economic assets not to increase the wealth of the few but to raise the many from poverty to a decent standard of comfort.

We must lift the poor man of India from poverty to security, from ill-health to vigour, from ignorance to understanding.

And our rate of progress must no longer be at the bullock-cart standard but atleast at the pace of the handy and servicable jeep."

இந்தியாவின் பொருளாதார வளத்தை, தக்க முறையில், பலன் தரத்தக்க வகையிலே பயன்படுத்துவதுதான் நமது பணியாகும்— ஒரு சிலருடைய செல்வத்தை அதிகப் படுத்துவதற்காக அல்ல; ஆனால் பெரும்பாலோர்களை வறுமையிலிருந்து எழச்செய்து, வசதியுள்ள, நாகரீகமான வாழ்க்கைத் தரம் பெறும்படிச் செய்வதற்காக.

இந்தியாவிள்ள ஏழையை வறுமையிலிருந்து நிலையான வாழ்க்கைக்கு உயர்த்திட வேண்டும்; நலிவை

(13-ம் பக்கம் பார்க்க)

2—12

“வாழ்வதா சாவதா?”

“ஏதற்காக இப்படிப் பார்க்கிறீர், மாரிமுத்து? நண்பர் சோலையப்பனிடம் காதலியைப் போல நடித்து, கடைசியில் அவனைச் சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் தள்ளிய வஞ்சகி, நம்வீடு தேடிவந்து விட்டாளே என்று நினைக்கிறீரா? பாண்டிய நாட்டின் ஆற்றல் மகனை அல்லலில் தள்ளிய சூதுக்காரிக்கு இங்கென்ன வேலை என்று ஆத்திரமடைகிறீரா?

இப்படிக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, சோகத்தோடு கேட்டாள் செந்தாமரை—கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருந்த மாரிமுத்துவைப் பார்த்து,

“சோலையப்பன் எனது நண்பனா! இதென்ன விந்தையான பேச்சு! அவனிடம் காதலியாக நடித்தாயா—எனக்குத் தெரியாதே! இன்று அவன் சிறையில் அடைபட்டிருப்பதற்குக் காரணம் நீயா—ஆச்சரியமாக இருக்கிறதே கேட்க!” என்று மாரிமுத்து ஒன்றும் புரியாதவனைப் போல நடிக்க ஆரம்பித்தான்.

திடீரென்று அவள் இரவு நேரத்தில் புதுமையாகத் தன் வீட்டிற்கு வந்ததும், சோலையப்பனைப் பற்றிப் பேச ஆரம்பித்ததும், அவன் மனத்தில் பெருத்த சந்தேகத்தை எழுப்பி விட்டன.

“சோலையப்பனின் நண்பன் நான் என்பதும், பாண்டிய நாட்டில் பகுத்தறிவு மார்க்கம் பரவ வேலை செய்பவன் என்பதும், அந்தத் தூமகேதுவிற்கு எப்படியோ சந்தேகம் பிறந்துவிட்டதே! அந்தச் சந்தேகம் உண்மையா என்று அறியவும், அதற்கான ஆதாரங்களைப் பெறவும், கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு என்னை அடைத்துச் சிறையில் பூட்டவும், அவன் தன் வேலையை ஆரம்பித்துவிட்டிருக்கிறானே! அவன் கட்டளையை நிறைவேற்ற இதோ செந்தாமரை வந்திருக்கிறாளே — புதுவித நடிப்போடு!’

இந்த ஐயம் அவன் மனதில் எழுந்ததும், அச்சத்தோடு அவளைப் பார்த்தான்.

‘சோலையப்பனைச் சிறையில் சிக்கவைத்த நல்லபாம்பே, இங்கேன் வந்தாய் — போ வெளியே— என்று ஆத்திரத்தோடு பேசுவீர், கனல்தெறிக்கப் பார்ப்பீர் என்றெல்லாம் நான் எதிர்பார்த்து வந்தேன்! ஆனால் நீரோ சோலையப்பன் எனக்கு நண்பனா, அவனுக்கு நீ காதலியாக நடித்தாயா என்று அடிப்படையையே மறுத்துப் பேச தொடங்கிவிட்டீர்! மாரிமுத்து உம்மைப்பற்றி அத்தான் ஏராளமாகக் கூறியிருக்கிறார் என்னிடம்!’

‘அபாண்டமான பேச்சு! சோலையப்பனை நான் பார்த்திருக்கிறேனே ஒழிய அவனிடம் பேசியதுகூட கிடையாதே.

‘தங்கள் சந்தேகத்தை நான் புரிந்துகொண்டேன்! தூமகேதுவின் ஏவலால், நான் இங்கு வந்திருப்பதாக நினைக்கிறீர்கள் அல்லவா?’

‘அப்படி நினைக்க, நான் ஏதாகிலும் குற்றம்செய்திருந்தால்தானே. ஒற்றர் நாயகம்தானே எனது குரு! அவரது விரோதிகள், எனது விரோதிகள் அல்லவா? அவருக்குத் துரோகம் செய்பவர்கள், எனக்குத் துரோகம் செய்பவர்கள் அல்லவா? அப்படிப்பட்ட என்னைச் சோதிக்க எனது குருநாதர் உன்னை அனுப்பியிருப்பார் என்று சந்தேகப்பட, பைத்தியக்காரனோ முட்டாளோ, அல்ல நான்!’

போதும் மாரிமுத்து, நொந்த என் மனதை மேலும் நோகச் செய்யாதீர்கள்! என் கதையைக் கேளுங்கள், பிறகு எனக்கு உம்மால் உதவி செய்ய முடியுமா, முடியாதா என்பதை மட்டும் சொல்லிவிடுங்கள்! உம் உதவியைப் பெற்று, அத்தானுக்கு உண்மையைத் தெரிவித்து திரும்பவும் அவரை அடைய வழியிருக்கிறது என்று சிதாரி கூறினாள். அவள் பேச்சை நான் நம்பவில்லை! எனக்குத் தெரியும், என் நிலையை யாராலும் புரிந்துகொள்ள முடியாது என்று! இப்பொழுது நான் எவ்வளவு அழுதாலும், எல்லாம் நடிப்பென்றே கருதுவார்கள்! அத்தான் அத்தான் என்று உடல் உருக ஏங்கிப் புலம்பினாலும், பாசாங்குக்காரி என்றே என்னைப் பழிப்பார்கள் என்பதை அறியாதவள் அல்ல நான்! இருந்தாலும், சிதாரியின் விருப்பத்தை ஏன் தட்டவேண்டும் என்ற எண்ணத்தினால்தான், தங்களைப் பார்க்க வந்தேன்! வாழ்வதா? சாவதா? என்ற குழப்ப நிலையில் இல்லை நான்! தற்கொலையைத் தவிர, இந்த உலகில் எனக்கு அமைதியைத் தர வல்லது வேறு ஏதுமில்லை என்ற முடிவிற்கு வந்துவிட்டவள் நான்! அமைதியைத் தரவல்லது மட்டுமல்ல, என்மீதிருக்கும் களங்கத்தையும் தற்கொலைதான் போக்கும்! மாரிமுத்து, அத்தகையமனநிலையை அடைந்துவிட்ட நான்—தூமகேதுவின் தூண்டுதலால் வரவில்லை என்பதைத் தாங்கள் நம்பும்படியாக விளக்கிக்கூறும் சிரமத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை! விரும்பினாலும் இப்பொழுது என்னால் முடியாத காரியம் அது! என் கதையைக் கூறுகிறேன்—நம்பினால் நம்புங்கள்! இல்லையேல், என் வழி எனக்கு இருக்கவே இருக்கிறது! என்று கலங்காத திடமான குரலில் சொல்லி நிறுத்திய செந்தாமரை—சில நொடிகள் மௌனத்திற்குப் பிறகு—கல்லும் கரையும் என்பார்களே அத்தகைய உருக்கத் தொனியில், நடந்ததைக் கூறத் தொடங்கினாள்.

சோலையப்பனுக்கும் தனக்கும் உண்டான தொடர்பைப் பற்றி செந்தாமரை கூறிக்கொண்டிருந்த போது, சிதாரியின் மனதில் வேறு எண்ணங்கள் எழத் தொடங்கின.

சோலையப்பன் சிறையிலிருக்கிருனே என்று செந்தாமரையின் இதயம் இரத்தக் கண்ணீர் வடிக்கிறது! காதல் உள்ளத்தைத் திறந்து காட்டியும், தன்னை நம்ப அவன் மறுத்துவிட்டானே என்ற ஏமாற்றமும், ஏக்கமும், இவள் உயிரைத் தின்னத் தொடங்கிவிட்டன! மார்பை விம்மி வெடிக்கச் செய்யும் துக்கம். இவளைத் தற்கொலைக்குத் துணியச் செய்கிறது! உயிரை மாய்த்துக் கொள்ளாமல், இவளை எப்படியும் பார்த்துக் கொள்ள வேண்டும்! சோலையப்பனைக் காப்பாற்ற இனி யாராலும் முடியாது! காப்பாற்றிவிட முடியும் என்ற திடநம்பிக்கையோடு, அதற்கான காரியங்களைச் செய்வது பைத்தியக்காரத்தனமாகும்! சொன்னால் யார் கேட்கப் போகிருர்கள்? சர்வாதிகாரச் சதிக்கூட்டத்தின் தலைவனுயிற்றே தூமகேது! அவனு சோலையப்பனை உயிரோடு சிறைக்கு வெளியே அனுப்புவான்! அவன் தொழும் சிவனே நேரில் வந்து, 'பாவம் மன்னித்துவிடு' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாலும், அவன் தன் கருத்தை மாற்றிக் கொள்ளமாட்டானே! அக்கினிக்குச் சுட்டுப் பொசுக்கத் தெரியுமேயன்றி, குளிர்ச்சி தந்து பசுமை ஊட்டத் தெரியுமா? தூமகேது தீயாயிற்றே! அவனிடம் இரக்கத்தை எதிர்பார்க்க முடியுமா? புலிக் குகையினுள் சிக்கிவிட்ட ஆடு, உயிரோடு எப்படி மந்தைக்குத் திரும்பமுடியும்? சோலையப்பன் பிணமாகப் போவதென்னமோ நிச்சயம்! அவனைக் காப்பாற்ற எந்த சக்தியினுலும் முடியாது! உள்ளங் கவர்ந்தவன் உயிர் இழந்தானே என்ற துக்கத்தில் இவளைத் தற்கொலை செய்து கொள்ளாமல் காப்பாற்றிவிட்டால் போதும்! அதன் பிறகு, காலம் இவளது கவலையைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துவிடும்! சோகம் குறைந்ததும், செய்த சபதம் மனத்தில் தலைநிமிர்ந்து நிற்கத் தொடங்கும்! எதற்காக நாட்டியக்காரியாக மாறினுளோ, எதற்காகத் தூமகேதுவின் ஒற்றர்களிலே ஒருத்தியாகச் சுற்றித் திரிந்தாளோ — அந்த விவரங்கள் அவளது நினைவிற்கு வரும்! சோலையப்பன் கொல்லப்படாவிட்டால், ஒருவேளை பிரிந்தவர் கூடினுலும் கூடுவர். பின்னர் அவனது நலத்திலேயே இவளது நாட்டமிருக்குமேயன்றி, எந்த இலட்சியத்திற்காக உயிர் வாழ்கிருள் என்பதையே மறந்துவிடுவாள்! செந்தாமரையின் சபதம் நிறைவேற வேண்டுமானுல்-சோலையப்பன் பிணமாவதுதான் நல்லது!

இவ்வாறு சிதாரி நினைத்தாள்.

"இதுதான் மாரிமுத்து என் கதை!" என்று சொல்லி, அவன் என்ன நினைக்கிருன் என்பதை அறிய, அவனது கண்களை உற்றுப் பார்த்தாள்.

"செந்தாமரை! நீ சொல்லியதை நான் நம்புகிறேன்!" என்று பரிவோடு அவளைப் பார்த்துக் கூறினுன், மாரிமுத்து.

அதைக் கேட்டு, அவள் நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

"மாரிமுத்து! அத்தானிடம் உண்மையை எடுத்துக்கூறி, என்மீதிருக்கும் வெறுப்பையும், ஆத்திரத்தையும் போக்குவீர்களா?

"கவலைவேண்டாம் செந்தாமரை என் சொல்லை அவன் நம்புவான்!"

"அந்த ஒரு உதவி போதும் எனக்கு!"

"அதனுல் என்ன நன்மை ஏற்பட்டுவிடும்? சோலையப்பன் உன்னைக் காதலித்தாலும் பழித்தாலும் ஒன்றுதானே—அவன் சிறையிலிருக்கையில்! பாண்டிய நாட்டில் தனக்கு விரோதமான காரியங்களை ஒரு கூட்டம் செய்துவருகிறதென்றும் அதற்குத் தலைவன் சோலையப்பன் என்றும் தூமகேது அறிந்திருக்கிருன்! எனவே தனது பெரிய விரோதியை மன்னித்துவிட அவன் ஒருபோதும் இசையான்! சோலையப்பனின் பிணம் கல்லறையில் அடைக்கப்படும்வரை அவன் தூங்கவும் மாட்டான்!"

"அது எனக்குத் தெரியாதா மாரிமுத்து? அத்தான் சாகும்போது, அவரது நெஞ்சிலே என்னைப் பற்றிய நல்லெண்ணம் இருந்தால் போதும்! அதன் பிறகு பொன்னையாவும் அத்தானும் விட்டுச் சென்ற பணியை நான் முடிப்பேன்! அந்த வஞ்சகன் தூமகேதுவின் இரத்தத்தால் அந்த இரு உத்தமர்களின் கல்லறைகளையும் கழுவுவேன்!"

"பொன்னையாவும் சோலையப்பனும் செய்து முடிக்காமல் போனதை, நீ செய்து முடிப்பாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது! சோலையப்பனைப் பறிகொடுத்துவிட்டு, அதன் பிறகு செய்யவேண்டியவைஎன்னவென்று நினைத்துப் பார்ப்பதைவிட, இப்பொழுது அவனைக் காப்பாற்ற ஏதாகிலும் மார்க்கமிருக்கிறதா என்று தேடிப்பார்ப்பது பயனுள்ளதல்லவா?"

"ஆமாம் மாரிமுத்து, ஏதாகிலும் மார்க்கமிருந்தால் சொல்லுங்கள்! நாம் எல்லோரும் ஒன்ருகக் கூடி, அத்தானை விடுவிக்க, இரத்தத்தைச் சிந்தலாம்!"

அங்கே சிறிது நேரம் மௌனம் நிலவியது. தரையைப் பார்த்தபடி ஏதோ யோசித்துக் கொண்டிருந்த மாரிமுத்து, முகத்தைத் தூக்கி செந்தாமரையைப் பார்த்துத் திரும்பவும் பேசத் தொடங்கினுன்.

"செந்தாமரை, எதற்காக இந்த மல்லிகை மாலைகொண்டு வந்திருக்கிருய்?"

"அத்தான் கைதியானதிலிருந்து, ஒவ்வொரு இரவும் மயானத்திற்கு நான் செல்கிறேன்! உத்தமர் பொன்னையாவின் கல்லறைமீது மலர்மாலை போட்டு மனஅமைதியோடு கொஞ்சநேரம் அங்கே இருப்பது வழக்கம்! சுடுகாட்டில் கிடைக்கும் அமைதியிருக்கிறதே — அதைப் போன்ற அமைதி வேறு எங்குமே எனக்குக் கிடைக்கவில்லை!"

"அப்படியானுல், இன்றிரவும் நீ அங்கே செல்வாய்?"

"ஆமாம், அதற்காகத் தானே மாலை கொண்டுவந்திருக்கிறேன்!"

"சரி புறப்படு. நானும் வருகிறேன்!"

மூவருமாகமயானத்திற்குச் சென்ருர்கள். பொன்னையாவின் கல்லறைமீது மல்லிகை மலர் மாலையைச் செந்தாமரை வைத்துவிட்டு, மண்டியிட்டு வணங்கினுள் — கண்களை மூடிக்கொண்டு, அவளுக்குப் பக்கத்தில் சிதாரியும், எதிர்ப்புறத்தில் மாரிமுத்துவும் நின்றிருந்தனர்.

சிறிதுநேரம் கழித்து செந்தாமரை கண்களைத் திறந்தாள்.

அவளது பார்வையில், பக்கத்தில் கிடந்த மண்டை ஓடுகளும், எலும்புத் துண்டுகளும்பட்டன. மண்டை ஓடுகளில் ஒன்றைக் கையில் எடுத்தாள்.

"ஒருவனிடம் எவ்வளவு தான் அதிகாரமிருந்தாலும், மலையளவு செல்வம் குவிந்திருந்தாலும், என்றைக்காகிலும் ஒரு நாள் அவன் பிணமாகித்தானே தீரவேண்டும்!" என்று பெருமூச்சு விட்டபடி, மாரிமுத்துக் கூறியதைக் கேட்டதும், அவள் எழுந்து நின்ருள்.

"செந்தாமரை, இது யாருடைய மண்டை ஓடு?"

"ஆயிரக் கணக்கானவர்களை இங்கே புதைக்கிருர்கள், சுடுகிருர்கள்! அவாகளில்லை இது யாருடையது என்று எப்படித் தெரிந்து கொள்ள முடியும்?"

"அதில்தான் செந்தாமரை, வாழ்க்கையின் உண்மை அடங்கியிருக்கிறது! குலசேகரன் மதுரையின் மன்னன்! தூமகேது வைத்ததுதான் சட்டம்—அவ்வளவு செல்வாக்கு இருக்கிறது அவனுக்கு! ஆளவந்தாரின் மகன் சோலையப்பன் செல்வந்தன்! செந்தமிழ்ச் செல்வன்! அறியாமையை விரட்டியடிக்க, சிங்கார வாழ்வையும் துச்சமென உதறித் தள்ளிவிட்டு, சிறையில் வாடும் உத்தமன்! என்றெல்லாம் மனிதர்களைத் தனித்தனியாகப் பிரித்துப் பேசுகிருாகள் அல்லவா? உயிரோடு இருககும்போதுதான், உயர்வு தாழ்வு பேதங்களும் நல்லவன் கெட்டவன் வேறுபாடுகளும் உள்ளன! செத்துவிட்டால், எல்லோரும் பிணம் என்ற ஒரே நிலையை பெறுகிருர்கள் — ஒரே இடத்திற்கு வந்து சேருகிருர்கள்! சுடுகாடுதான் மனித இனத்தின் பேதங்களைப் போக்குவது, உயர்வு தாழ்வை அகற்றுவது! எவ்வளவு பெரியவனுனுலும் அவனுக்கும் ஒரு நாள் மரணம் உண்டு!'

'ஆமாம் மாரிமுத்து, ஆமாம்! அதனுல்தான் நான் சுடுகாட்டில் மன அமைதியைப் பெறுகிறேன்!' என்று சொல்லிக்கொண்டு கல்லறைக்குச் சிறிது தள்ளி புற்றரையில் உட்கார்ந்தாள்.

'நீங்களும் உட்காருங்கள் என்று மாரிமுத்துவிடம் கூறிவிட்டு, சிதாரியும் அமர்ந்தாள்.

'அத்தானை விடுவிக்க என்ன செய்யலாம் என்று கூறுங்கள் மாரிமுத்து!'

'சோலையப்பனை விடுவிக்க, எவ்வளவுதான் யோசனை செய்து பார்த்தாலும், ஒரே ஒரு வழிதான் எனக்குத் தோன்றுகிறது!'

'சொல்லுங்கள்—அப்படியே செய்யலாம்!'

'குலசேகரனே ஊரிலில்லை! தூமகேதுவோ ஏதோ முக்கிய வேலையாக சோழநாடு சென்றிருக்கிருன்! ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக் கொண்டு, மதுரையில் திடீரென்று ஒரு கலவரத்தைத் தூண்டிவிட வேண்டும்! நாட்டின் விடுதலையில் அக்கறை கொண்டவர்களை ஒன்றுகத் திரட்டி, சோலையப்பன் அடைபட்டிருக்கும் சிறையைத் தாக்கித் தகர்த்து, அவனை மீட்கவேண்டும்!'

'அதற்கு வேண்டிய ஆதரவு நமக்குக் கிடைக்குமா?'

'காக்கை, குருவி, சிங்கம், புலி, மாடு, மான் முதலியவற்றுக்கு இருக்கும் தாய் அன்புகூட, பாண்டிய நாட்டு மக்களுக்கு இருக்காது என்று நினைக்கிருயா, நாட்டிற்கு நல்லது செய்ய உழைத்தவன் மீது. சோலையப்பனை விடுவிக்கவேண்டும் புறப்படுங்கள் என்று யாராவது முன்நின்று முழக்கமிட்டால், ஆயிரக் கணக்கானவர்கள் ஓடிவரக் காத்திருக்கிருர்கள்!'

'அப்படியானுல், எப்பொழுது சிறையைத் தகர்த்து, அத்தானை அடையும் வேலையை ஆரம்பிக்கலாம் என்று சொல்லுங்கள்!'

'அதுதானே முடியாது!'

'ஏது!'

'மக்களைக் கூட்டிச் சிறையைத் தாக்கித் தகர்ப்பது!'

'மக்களின் ஆதரவு கிடைக்கும் என்றீரே—அதன் பிறகும் சிறைக் கதவுகளைத் தூளாக்குவதில் என்ன சிரமம் இருக்கிறது?'

'மக்களின் ஆதரவு மட்டும் இருந்தால் போதுமா, மக்கள் தலைவர்களின் ஒப்புதல் தேவையில்லையா?'

'தங்கள் பேச்சு எனக்குப் புரியவில்லையே, மாரிமுத்து?'

'இந்தத் திட்டத்தை அறிவொளியடிகளிடம் கூறினேன்! இது அவருக்குப் பிடிக்கவில்லை! உயிர்கள் அதனுல் துன்புறுமாம்! பைத்தியக்கார வேதாந்தம்—தெரியாமல் அவரைப்போய் யோசனை கேட்டுவிட்டேன்! கேட்காமலிருந்திருந்தால், நம் விருப்பம்போலச் செயலாற்றியிருக்கலாம்! அவர் கூடாது என்று சொல்லிவிட்டதை, நாம் செய்வது என்பது அவ்வளவு சரியல்ல!'

'ஆமாம், வேறு மார்க்கம் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும்!'

'செந்தாமரை! சிறையிலிருந்து சோலையப்பனையும், கயவனின் கையிலிருந்து அஞ்சலையையும் மீட்க வேண்டிய இருவேலைகள் நமக்கிருக்கின்றன!'

'என்ன, அஞ்சலை கயவன் கையிலா?'

'அறிவொளி அடிகளும் அவளும் புத்தபுரத்திற்குச் சென்றுவிட்டுத் திரும்பியபோது, வழியில் யாரோ கள்வர்கள் அஞ்சலையைத் தூக்கிக் கொண்டு போய்விட்டார்களாம்! அவர்கள் கள்வர்களாக இருக்க மாட்டார்களென்றும், யாரோ ஒரு கயவனின் கையாட்களாகத்தான் இருக்கவேண்டுமென்றும் நான் நினைக்கிறேன்!"

'தூமகேதுவின் ஆட்களாக இருந்தாலும் இருப்பார்கள்! அத்தகைய பாதகச் செயல்களுக்கு, அந்த வஞ்சகன் பயப்படுபவனுமல்ல!'

'தூமகேது அவனைத் தூக்கிவரச் செய்திருந்தால், எங்கு அவளை வைத்திருப்பான்?'

இனி உமக்கு அந்தக் கவலைவேண்டாம்! அஞ்சலை இருக்கும் இடத்தை எப்படியாவது நான் கண்டுபிடித்துச் சொல்கிறேன்!"

"உன்னுல் அது முடியுமா?"

நிச்சயம் முடியும்! தூமகேதுவையே அஞ்சலை இருக்கும் இடத்திற்கு என்னை அழைத்துப்போகும்படி செய்கிறேன்! ஒரு இரகசியமிருக்கிறது—அதைச் சொன்னுல் போதும் — மறுநொடியே அவள் எதிரில் என்னைக் கொண்டுபோய் நிறுத்திவிடமாட்டாஞ?" என்று செந்தாமரை நம்பிக்கை நிறைந்த குரலில் சொல்லியதைக் கேட்டதும் மாரிமுத்துவின் தோள்கள் பூரித்தன.

[வளரும்]

ஒருவர்க்கும் அஞ்சாமல் ஓயாமல் சொல்கிறார்

9-ம் பக்கத் தொடர்ச்சி

நீக்கி ஆற்றலுள்ளவனாக்கவேண்டும்; அறியாமையிலிருந்து தெளிவுள்ள நிலைக்கு உயர்த்தவேண்டும்.

நமது முன்னேற்ற வேகம் இனி, கட்டை வண்டி அளவினதாக இருந்திடக் கூடாது, குறைந்த பட்சம் கைக்கு அடக்கமான, பயன்படுகிற ஜீப் (மோடார்) வேகத்தின் அளவாவது இருக்கவேண்டும்.

இலக்கிய நயமே கூட இருக்கிறதல்லவா, தம்பி! இந்தப் பேச்சில்.

இந்தியாவிலே இயற்கையான பொருளாதார வளம் இருக்கிறது.

அந்த வளத்தைத் தக்க முறையில் பயன்படுத்தவேண்டும்.

அப்படிப் பயன் படுத்துவது ஒரு சிலர் செல்வம் சேர்ப்பதற்காக இருக்கக் கூடாது.

மிகப் பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, அந்தப் பொருளாதார வளர்ச்சி பயன் படவேண்டும்.

ஏழை, வறுமையின் பிடியிலிருந்து விடுவிக்கப் பட்டாகவேண்டும்.

ஏழையின் வாழ்விலே ஒரு நிம்மதியும், நிலையான தன்மையும் ஏற்படவேண்டும்.

ஏழையின் நலிவு நீங்கவேண்டும்; வலிவு மிகவேண்டும். அறியாமை போகவேண்டும்; தெளிவு பிறந்திடவேண்டும்.

அதற்கான முன்னேற்றம் கட்டை வண்டி வேகத்தில் இருக்கக் கூடாது.

முன்னேற்ற வேகம், குறைந்தது ஜீப் மோடாரின் வேகத்தின் அளவுக்காவது இருக்கவேண்டும்.

இப்படியெல்லாம் மெருகு கூட்டிப் பேசமாட்டார் எங்க காமராஜர், மனதிலே பட்டதை அப்படியே மெருகு கலவாமல், சுத்தமாகச் சொல்லுவார், வேறு சிலர் போல அவர் தமது பேச்சுக்கு அழகு கூட்டிக் கொண்டிருக்கமாட்டார், ஆனால், இப்போது உங்கள் அண்ணாதுரை எடுத்துக் காட்டினாரே, இதையேதான் 'எங்க தலைவர்' ஒவ்வொருநாளும் சொல்லுகிறார், ஓயாமல் சொல்லுகிறார், ஒருவருக்கும் அஞ்சாமல் சொல்லுகிறார், உள்ளன்போடு சொல்லுகிறார், உணர்ந்து சொல்லுகிறார் — என்றெல்லாம், தம்பி! காங்கிரஸ்காரர்கள் கூறக்கூடும்.

அதிலேயே சிலர், இதுபோல இலக்கிய அழகு சொட்டச் சொட்டப் பேசினாரே, எமது பண்டிதர், அறிவாயா!!—என்று கேள்வியைக் கிளப்புவார்கள்.

தம்பி! நான் இந்தப் பேச்சை எடுத்துக் காட்டுவது, காமராஜர் 'கொச்சை'யாகக் கூறுவதை, ஏன் இதுபோல இலக்கிய அழகுடன் கூறக்கூடாது என்று கேட்கவுமல்ல; இலக்கிய நடைப் பேச்சில் பண்டிதர் வல்லவர் என்பதை மறுப்பதற்கும் அல்ல. என் நோக்கம் வேறு. மறுமுறையும், அந்தப் பேச்சைப் படித்துப் பார், தம்பி! அதிலே ஒரு இடத்திலாவது சோஷியலிசம் என்ற வார்த்தை இருக்கிறதா என்று பார்! இல்லையல்லவா!!

இப்போது காங்கிரஸ் கூறுவது அவ்வளவும் அந்தப் பேச்சிலே இருக்கிறது.

பொருளாதார முன்னேற்றம்.

அது பத்துப் பணக்காரர்களுக்குமட்டும் பயன்படுவதாக இருந்துவிடக் கூடாது, ஏழையைவாழவைப்பதாக இருக்கவேண்டும்.

முன்னேற்றம் வேகமாக இருக்கவேண்டும்.

இவை யாவும் காங்கிரஸ் பேச்சிலே உள்ளவையே!

ஆனால் இந்தப் பேச்சிலே சோஷியலிசம் என்ற சொல்லே இல்லை.

இதே பேச்சைப் பேசிக்கொண்டு, இதுதான் சோஷியலிசம் என்று காங்கிரஸ்காரர்கள் பேசுகின்றனர்.

பேசுவது மட்டுமல்ல, இதைக் காமராஜர் பேசும்போது கேட்டாலும் கேட்டேன், உன் பேச்சைப் போலக் கேட்கல்லே! —என்றும் பாடுகிறார்கள்!

இதனைப் புதிய கண்டுபிடிப்பு என்கிறார்கள்!

இதற்குக் காமராஜர் தந்தையாம்! சிற்பியாம்!!

ஜனநாயகம் — சோஷியலிசம் என்ற வார்த்தைகளைச் சொல்லத் துணிவின்றி ஜவஹர்லால் நேருகூட இருந்துவிட்டுப் போய்விட்டார், இப்போது 'நேசப் பிதா' வந்துதான் இதனைப் பேசுகிறார் என்கிறார்கள்.

அர்ச்சனை செய்வது என்று கிளம்பிவிட்ட பிறகு, 'சஹஸ்ர நாமம்' வரையில் போகவேண்டியதுதான்! போகிறார்கள்.

அதற்காக அல்ல, தம்பி! நான் இதனைச் சொல்வது. நான் காட்டிய பேச்சுதான்; இப்போதும் காங்கிரஸ் கட்சி பேசிவருகிறது.

அந்தப் பேச்சிலும் சரி, இப்போது பேசப்படுவதிலும் சரி, பணக்காரர்கள் என்ற ஒரு வர்க்கம் இருக்க அனுமதிக்கமாட்டோம் என்ற திட்டவட்டமான அறிவிப்பு இல்லை.

நாட்டு வளம், ஒரு சிலர் செல்வத்தைக் குவித்திடப் பயன்பட விடக்கூடாது; ஏழையின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப் பயன்படுத்தவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

பூவெனக் கூவி முருங்கைப்பூ விற்பரோ?

அது சோஷியலிசம் அல்ல என்பதால்தான், நான் எடுத்துக் காட்டிய பேச்சில், சோஷியலிசம் என்ற வார்த்தை இணைக்கப்படவில்லை.

சிறகை விரித்தாடும் பறவை என்பதற்கும் மயில் என்பதற்கும், வித்தியாசம் இல்லையா, தம்பி!

மயில் மட்டுமா சிறகை விரித்தாடுகிறது; வான் கோழி கூடத்தானே!

மயில் என்று கூறினால், மயிலாக இருக்கவேண்டுமேயன்றி, சிறகை விரித்தாடுவது மயில், இதோ இதுவும் சிறகை விரித்தாடுகிறது; ஆகவே இதற்கு மயில் என்றே நான் பெயரிடுகிறேன் என்று கூறி ஒரு துணிந்த பேர்வழி, வான்கோழியைக் கொண்டு வந்து காட்டினால், தம்பி! என்ன எண்ணிக் கொள்வது? அந்த நெஞ்சழுத்தத்தை வியந்திடத்தானே வேண்டும்! சிறகு விரித்து ஆடுவதெல்லாம் மயிலாகுமா?

நான் எடுத்துக் காட்டிய பேச்சிலே, ஏழையை வாழவைத்தாக வேண்டும் என்ற விருப்பம் தெரிவிக்கப்பட்டிருப்பினும், அதிலே சோஷியலிசம் என்ற வார்த்தை காணப்படாததற்குக் காரணம், இதனைச் சோஷியலிசம் என்று கூறினால், நம்மை விவரமறியாதவன் என்று அறிவாளர் எண்ணி எண்ணி நகையாடுவார்களே என்ற அச்சம், கூச்சம்.

அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமென்பதில்லையே! அறிந்தோர் தொகை நூற்றில் ஒரு முப்பதே! என்பதனாலே! என்று காங்கிரசின் பெருந் தலைவர்கள் துணிந்துவிட்டார்கள்; அதனால்தான் அந்தப் பழைய பேச்சுக்கே **'சோஷியலிசம்'** என்று பெயரிட்டுவிட்டார்கள்.

பெயர் முக்கியமல்ல, நோக்கம்தான் முக்கியம் என்று வாதாடுவார் உளர். உண்மை! ஒப்புக்கொள்வோம், தம்பி! ஆனால் ஒரு பொருந்தாத பெயரைத் தேடி எடுத்து ஏன் சூட்டவேண்டும்! அந்தப் பெயர் மக்களைச் சொக்கவைக்கும் என்பதால்தானே! அந்த நோக்கம், நேர்மையானதுதானா?

பூவோ பூ!—என்று முருங்கைப் பூவை விற்பாரைப் பார்த்ததுண்டா? பார்த்திருக்க முடியாது! இதோ! விற்கிறார்களே ஜனநாயக சோஷியலிசம் என்று—ஐயோ! பாவம்! ஏழையும் வாழட்டும் என்ற பழைய பேச்சை; புதிய 'லேபிள்' ஒட்டி. பாரேன்!

ஏழையை வாழ வைப்பதே எமது நோக்கம்

என்ற இந்தப் பேச்சு, புரட்சிப் பேச்சாக, புதுமைப் பேச்சாக, சோஷியலிச கீதமாக விளம்பரப்படுத்தப்படுகிறதே, தம்பி! இதே கருத்தைக் கொண்ட பேச்சு நான் எடுத்துக் காட்டினேனே, அது யாருடையது தெரியுமா?

ஜவஹர்லால் நேருவுடையதா?

லால்பகதூர் சாஸ்திரியுடையதா?

லாலா லஜபதிராயுடையதா?

மோதிலால் நேருவுடையதா?

என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருக்க வேண்டாம் தம்பி! இது எந்தக் காங்கிரஸ் தலைவருடைய பேச்சும் அல்ல; சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட எவருடைய பேச்சுமல்ல, சொல்லப்போனால் 'பாரதபுத்திரர் எவரும் பேசியது அல்ல; ஏகாதிபத்திய ஏஜண்டு பேச்சு.

ஆமாம்! தம்பி! பதறுவர் காங்கிரஸ்காரர். ஏழை வாழவேண்டும், பணக்காரனுக்காக நாட்டுச் செல்வம் இல்லை, ஏழைக்காக அவனுக்கு நல்வாழ்வு அளிக்க!—என்று பேசும் திறமையும் நேர்மையும், உரிமையும் உணர்ச்சியும் எமக்கன்றோ உண்டு! நாட்டு விடுதலை வீரர்களாம் நாங்கள் மட்டுமே பேசக்கூடிய இந்த உருக்கமான பேச்சை, எழுச்சியூட்டக்கூடிய பேச்சை, ஒரு ஏகாதிபத்திய ஏஜண்டா பேசினான்? யார் அவன்?—என்றெல்லாம் கேட்பர். பதறிப் பயன் இல்லையே! தம்பி! உள்ளபடி, இன்று இவர்கள் பேசும் இதே பேச்சை, இவர்களைப்போல போலி லேபிள் ஒட்டாமல் பேசியவர், இந்தியாவின் வைசிராயாக இருந்தவர்; வெள்ளையர்! 1944ம் ஆண்டு வைசிராய் பேசிய பேச்சு இது.

1944ல்—இருபத்தி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வெள்ளைக்கார வைசிராய் பேசியதை, அதே கருத்தை 1964ல் போலி லேபிள் ஒன்று ஒட்டி, இவர்கள் பேசுகிறார்கள்.

இருபத்தி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நாடு கேட்ட அதே பேச்சு, இன்று சோஷியலிசம் என்ற பெயர் ஒட்டப்பட்டு மக்களுக்கு அளிக்கப்படுகிறது.

ஒரு வெள்ளைக்கார ஏஜண்டு, எதைச் சொன்னானோ, அதை இருபத்தி இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இவர்கள் சொல்லுகிறார்கள்; இதிலே புதுமை இருக்கிறதாம், புரட்சி இருக்கிறதாம்; நம்பச் சொல்லுகிறார்கள்.

அவன் சொன்னான்! நாங்கள் செய்கிறோம்! புரிகிறதா வித்தியாசம் என்று பொறி கிளப்புவோர் பேசுவர். பேசட்டும், தம்பி! அடுத்த கிழமை, இவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதுபற்றியும் கூறுகிறேன். இந்தக் கிழமை, இவர்கள் இன்று பேசுவதிலே புதுமையும் இல்லை புரட்சியும் இல்லை, இதைப் பேச அபாரமான ஆற்றலோ ஏழைகளிடம் ததும்பி வழியும் அன்போகூட இருந்திடத் தேவையில்லை, இதுபோல ஒரு வெள்ளைக்கார ஏகாதிபத்திய ஏஜண்டினாலேயே பேச முடிந்தது-இருபத்தி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே—என்பது வரையில் கூறினால் போதும் என்று கருதுகிறேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

கேள்வி--பதில்!

1. கனம் பக்தவத்சலம் அடிக்கடி 'ராஜாஜி'யைத் தீவிரமாகக் கண்டிப்பது ஏன்?

ஒருவேளை, தன்மீது பெரியார் ஏற்றியுள்ள பழியைத் துடைத்துக்கொள்வதற்காக இருக்கலாம் பக்தவத்சலம் 'ராஜாஜி'யின்உளவாளி என்றல்லவா பெரியார் கூறி வருகிறார்.

2. பெரியாரின் ராமாயண எதிர்ப்புப் பிரசாரம்பற்றி காமராஜர் என்ன சொல்லுவார்?

ஆமான்னேன்! அவரு ராமாயணத்தை எதிர்க்கருருன்னேன். வேணும்னு போய்க்கேட்டுக்கோன்னேன். ராமாயணத்தை ஆதரிச்சு பேசவும் ஆள் இருக்குன்னேன்; அதுக்கு கிருபானந்தவாரியாரு உண்டுன்னேன். அது வேணும்னு அங்கே போன்னேன். எனக்கு இரண்டு தினுசு ஓட்டும் வேணும்னேன் —என்று வெகு எளிதாகப் பதில் சொல்லுவார்!

3. காரைக்கால் பகுதியில் எண்ணெய் ஊற்றுக்கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதாமே, உண்மையா?

உண்மைதான்! இயற்கை அன்னை தமிழர்களிடம் பரிவு காட்டத் தவறுவதில்லையே! இயற்கைவளத்தைப் போதுமான திறமையுடன் பயன் படுத்தும் ஆட்சி அமையவில்லையே என்பது தானே மக்களைத் தாக்குகிறது.

4. பெரிய, ஆடம்பர மோடார்களில் இனி அமைச்சர்கள் பயணம் செய்யப் போவதில்லையாமே, மகிழ்ச்சிதானே!

எனக்கும் உனக்கும் இதனுலே என்ன மகிழ்ச்சி! அந்தப் படகு மோட்டார்களைப் பயன்படுத்தப் போகிறவர்களுக்கல்லவா மகிழ்ச்சி துள்ளும்!!

5. இந்தியா, அணுகுண்டு தயாரித்து வருவதாக அயூப்கான் பேசுகிருரே ஏன்?

சீனுவுடன் சரசமாடி அணுகுண்டு பெற நடத்திக்கொண்டுள்ள சதியை மூடி மறைக்க.

6. காஷ்மீரத்து பக்ஷிகுலாம் முகமது தைரியசாலிதாஞ?

பலே துணிச்சல் பேர்வழி! அவர்மீது ஊழல், இலஞ்சம் போன்ற குற்றங்களுக்கான விசாரணை நடந்துகொண்டிருக்கும்போதே, ஆட்சியை நடத்துபவரை எதிர்த்து நிற்கிருரே! நெஞ்சழுத்தக்காரர் அல்லவா!! ஒருசமயம் தலைக்குமேல் வந்துவிட்டது வெள்ளம்; இனி 'ஜாண்' போனுல் என்ன, முழம் போனுல் என்ன என்றபோக்கிலே நடந்துகொள்கிருர் போலும்.

7. ராஜாஜிபுளியமரம், அந்த நிழலில் வேறு எதுவும் வளராது, ஆகவே தி. மு. க. அவருடன் நேசம்கொள்ளக்கூடாது என்று ஒரு காங்கிரஸ்காரர் பேசுகிருரே, ஏன்?

நாம் வளரவேண்டும் என்பதிலே அவருக்கு அவ்வளவு அக்கறை!— என்று எண்ணிக் கொள்ளும் ஏமாளி இங்கு யாரும் இல்லை என்பதைச் சொல்லவில்லையா — அவருக்கு!

8. ஊழல் ஒழிப்புப் பிரச்சினை எப்படி இருக்கிறது?

அதற்காகவே நியமிக்கப்பட்ட உயர்நீதிபதி, அரசியல் ஊழல் ஒழியாதவரை, பொது ஊழல் ஒழியாது என்று கூறிக் கை பிசைந்துகொள்ளும் அளவு 'முன்னேறி' இருக்கிறது!

9. தொல்லை இல்லாத அரசியல் எது என்று ஒரு நண்பர் கேட்கிருர்—சொல்ல முடியுமா?

தொல்லை இல்லாத அரசியலா? 'ஆமாம்சாமி!' போடுவதுதான்! — ஆட்சியில் உள்ளவர்களுக்கு!!

10. பாலம் பார்! பள்ளிக்கூடம் பார்! படிப்பகம் பார்! பகல் உணவு பார்!-என்று அடுக்கிக் காட்டுகிருர் ஒரு காங்கிரஸ் பேச்சாளர் — என்ன பதில் சொல்லுவது?

பாலத்தைக் கட்டிய காண்ராக்டரின் பங்களாவைப் பார். பள்ளிக்கூட ஆசிரியர் படும் அல்லலைப் பார்! குடிசையைப் பார்! அதிலே குமுறும் ஏழையைப் பார்! ஏழையைக் கசக்கிப் பிழிந்து குவித்துள்ள வரித் தொகையைப் பார், என்று சொல்லேன்! இருக்கிறதே இன்னல் அடுக்கடுக்காக! காங்கிரஸ் ஆட்சியிலே கிடைத்தவை!!

11. தி.மு. கழக மாநாடு அடுத்தது எப்போது? எங்கே?

ஆகஸ்ட்டு 27, 28ல், கள்ளக்குறிச்சியில்.

12. விதைக்காமல் அறுவடை கிடைத்திடும் வித்தை தெரியுமா உமக்கு?

எனக்கா! தெரியாதே! காங்கிரசிலே சேர்ந்துகொள்ளும் 'புதியவர்களை'க் கேட்டுப்பார்; வல்லவர்கள், அந்த வித்தையில்!!

13. நாங்கள் 'ஓட்டு' கொடுத்ததால்தானே, இப்படி எதிர்க்கிறீர்கள் என்று கோபிக்கிருர் ஒரு காங்கிரஸ்காரர்-என்ன சொல்லுவது?

வெள்ளைக்காரன் கூட இதைப் போலத்தான் பேசினுன்; நான் படிக்கக் கற்றுக் கொடுத்ததால் தானே என்னை எதிர்க்கத் துணிவு பெற்ருய் என்று! ஆதிக்கம் அழிக்கப்படும் என்ற அச்சம் ஏற்படும்போது இப்படிப் பேசுவதுதான் வாடிக்கை.

14. தோற்றுப் போய்விடும் என்று தெரிந்திருந்தும், எதற்காக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரவேண்டும்?

கேள்வி கேட்பவர்கள் இருக்கிருர்கள் என்பதை ஆளவந்தார்கள் மறந்து போகாதிருக்க; எப்படிப்பட்ட ஆட்சி நடக்கிறது என்பதை மக்களுக்கு எடுத்துக் காட்ட; ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற.

15. அடக்குமுறையால் காங்கிரஸ் அல்லற்பட்டபோது அதிலே ஈடுபடாதவர்கள், ஆட்சிப் பீடத்தில் அமர்ந்த பிறகு சேர்ந்து குலவுகிருர்களே, எப்படி இருக்கிறது?

மரம் பழுத்ததும் வௌவால் வருவதுபோலத்தான், இதுவும்!

16. ஆயிரம் வேலி நிலம் என்கிருர்களே எவ்வளவு தொகை இருக்கும் அதன் விலை?

என்னைப்போய்க் கேட்கிருயே! குன்றக்குடி அடிகளிடம்போய்க் குழந்தை குட்டிகள் சௌக்கியமா என்று கேட்பதுபோலிருக்கிறதே இது!! கதர் அணிந்த சீமான் யாரிடமாவது கேட்டுப் பார், சொல்லுவார்!

முகப்பில்:

மார்ட்டின் லூதர் கிங்

சமுதாய உரிமைப் போராட்டம் என்பது, அரசியலில் அடிமைப் பட்டுள்ள நாடுகளில் மட்டுமே நிகழமுடியும் என்பதில்லை; அது அரசியல் சுதந்திரம் பெற்ற அமெரிக்கா போன்ற நாடுகளில் கூட நிகழமுடியும் என்பதற்கு, அமெரிக்காவின் நீக்ரோ விவகாரம் ஒன்றே சான்றுக்குப் போதுமானதாக இருக்கும்.

உலகத்தின் பல பாகங்களில் சமூகப் புரட்சிதோன்றி-அது பலப் பல வடிவங்கள் பெற்று பல்வகை முடிவுகளையும் திரிபுகளையும் கண்டிருக்கின்றது.

ஆனால் கடந்த 340 ஆண்டுகளாக அமெரிக்காவில் இத்தகு இனப் பிரச்னை தீராத நோயாகத் தொற்றிக் கொண்டே வருகிறது.

ஆபிரகாம்லின்கன் முதல், ஜான் கென்னடி வரையில், ஜான்சன் கூட தோலின் நிற பேதத்தால் தோற்றுவிக்கப்படும் இத்தகைய இன ஒதுக்கல் கொள்கையை வேருடன் களையமுயன்றும் முயற்சி முற்றுப்பெற்றதாயில்லை; முடிவுக்கும் வரக்கூடியதாயில்லை என்று கூறத்தக்க அளவுக்கு நீக்ரோவர் பிரச்சினை அமெரிக்காவில் தலையெடுத்துக்கொண்டுதான்வருகிறது.

என்றாலும்—கருப்புநிறத்தோலை எதிர்த்து வெள்ளை நிறத் தோல் உடையார் எழுப்பும் குரலுக்கும் செயற்படுத்தும் அடிமை முறைமைக்கும்—சில வெண்ணிற தோல் உடைய வெள்ளையர்கூட கண்டனம் தெரிவித்து பேதம் களையப் பாடுபட்டும் வந்திருக்கிறார்கள் என்பதற்கு, வரலாற்று ஏட்டில், அங்கொன்றும், இங்கொன்றும் சில உதாரணங்கள் கிடைக்கத்தான் செய்கின்றன.

ஆனால், பாதிக்கப்பட்டவனின் ஈனக்குரல் நல்கும் இரக்க ஒலி போன்று — நடிப்போரின் குரல்— அத்துணைத் துல்லியமாக இருந்து விட முடியாதல்லவா!

அதுபோலத்தான் அடக்கி ஒடுக்கப்படும் இன மக்களிடையே அவ்வப்போது சில தலைவர்களும் தோன்றி தங்கள் இனநலனுக்காகப் பாடுபட்டும் வந்திருக்கிறார்கள்.

அப்படிப் பாடுபட்டவர்களில் ஒருவர்தான், இக்கிழமை இதழின் முகப்பில் காட்சியளிக்கும் **டாக்டர். மார்ட்டின் லூதர் கிங்** ஆவார்.

நீக்ரோவரின் நல்வாழ்வு குறித்தும், ஒற்றுமை நிலைபற்றியும் பல அரிய நூல்களை இயற்றியுள்ள இவர், ஒருசமயம், நீக்ரோவர்களைப் பார்த்து —

"உங்களில் சிலர் கத்தி வைத்திருக்கலாம்; தூக்கி எறியுங்கள்! ஆயுதங்கள் பெற்றிருக்கலாம்; ஒதுக்கி வையுங்கள் — நீதியை — நேர்மையை — ஒழுக்கத்தை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்!

என்று கூறிவிட்டு, வெள்ளையரைப் பார்த்து —

"நூற்றுக்கணக்கான ஆண்டுகள் எங்கள் தலைமுறையினர் கொடுமைகள் பல சுமந்து உழைத்ததனால், உங்களில் பலர் உயர்நிலை பெற்றுள்ளீர்கள்; எங்களுக்கு அடிமை வாழ்வு முறைமை அமைக்கப்பட்டிருக்கும் வரையில், உங்கள் வழிமுறைகள் தோல்வியடைந்தே தீரும்!"

— என்றும் கூறியிருக்கிறார் என்றால், இவரது தலைமை, நீக்ரோக்களுக்கு எவ்வளவு சிறப்புடையதாயிருக்கவேண்டும்!

ஊதியத்தை எதிர்பார்த்து சேவைசெய்யப்படுவதில்லை! சேவையின் உயர்வு கருதி ஊதியம் வருகிறது என்பதற்குக்கூட இவர் ஒரு இலக்கியமாகி யிருக்கிறார். சமாதானத்திற்காக வழங்கப்படும் நோபல் பரிசு, கடந்த 1964ல் இவரைத் தேடிவந்தடைந்திருக்கிறது என்றால் தியாகத்தின் அளவுதான் என்னே!

இவரது உத்வேகம் மிக்க கண்டனக் கணைகளைத் தாங்க இயலாமல் தானோ என்னவோ, கடந்த கிழமை **சிகாகோ** நகரில் ஒரு அறப்போராட்டத்தில் இவர் ஈடுபட்டிருந்தபோது வெள்ளையர் சிலர் கல்லாலடித்திருக்கின்றனர். கொலை செய்யும் நோக்கத்தோடு கத்தி ஒன்றும் பாய்ந்து வந்திருக்கிறது இவரை நோக்கி. ஆனால் அந்த நல்ல உயிர் இழக்கப்படக் கூடாது என்பதற்காகத்தானோ என்னவோ, ஒரு வெள்ளையன்மீது அது பாய்ந்து விட்டது!

அண்மைக் காலமாகவே அமெரிக்காவில் கருப்பர் — வெள்ளையர் விவகாரம், மக்கள் வீதாச்சார அடிப்படையில்கூட புதியபல பிரச்னைகளைப் பிறப்பித்துவிட்டிருக்கிறது.

இந்நிலையில், டாக்டர் மார்ட்டின் லூதர்கிங் கொலை முயற்சியின் மூலம் அமெரிக்கா வெள்ளையர்நாடு என்றும், கருப்பர் நாடென்றும் பிளவுபடுமோ என்றுகூட எண்ணம் ஏற்படுவது இயற்கையேயாகும்.

இதனால்தான் உலகின் இன்றைய அரசியல் வானில் முழுக்கவனத்தையும் ஈர்த்துக் கொண்டவராயிருக்கிறார் லூதர்கிங்!

O

2-ம் பக்கத் தொடர்ச்சி

அவரே கூறுகிறார்!

'போதும் இந்த பதவி' என்று புறப்படுவதற்குத் தயாராக இருக்கும் ஊதாண்ட் மூன்று காரணங்களினால் அண்மைக்காலமாக ஐ.நா. அமைப்பின் பெருமை பாதிக்கப் பட்டிருப்பதாகக் கூறுகிறார்.

1. உலக அமைப்பு இருக்கிறது என்பதையே மறைக்கும் வியட்நாம் போர்.

2. உலக அமைப்புக்கு நிதி தருவதில் உயர்வு நாடுகள் காட்டும் அலட்சிய உணர்வு.

3. உலக அமைப்பை முற்றிலும் அவமதிக்கும் நிலையில் உறுப்புநாடுகள் "எனது நாடு, உனதுதேசம்" என்ற குறுகிய கோட்டில் பிரச்சனைகளை விவாதிப்பது; சிக்கல்களை வளர்ப்பது.

சீமான்களே மலிந்த சிற்றூரில் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன்கிராம அதிகாரியாக பதவிவகிப்பதைப்போன்ற சிரமங்களை அனுபவிக்கிறது ஐ. நா.

அமெரிக்காவும் சோவியத் யூனியனும் ஐ. நா-வை புறக்கணித்த நிலையிலும் வாழமுடியும் ஆனால் நூற்றுக்கு மேற்பட்ட உறுப்புநாடுகள் பலவற்றுக்கு, அது ஒரு புனிதமான இடம்; நம்பிக்கை ஒளி.

அதன் தலைவர் உண்மை நிலையை உணர்த்தியுள்ளபடி ஐ. நா-வின் பெருமையை இனியும் முட்டுக்கொடுத்து நிறுத்திக்கொண்டிருக்க முடியாது என்ற கட்டத்தை எட்டவில்லை; ஆனால் அதை நோக்கி சூழ்நிலைகள் போய்க்கொண்டிருக்கின்றன.

தடுத்து நிறுத்திக்கொள்ள இருக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இது. பொறுத் திருந்து பார்ப்போம்.

—எஸ். ஆர்.

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பித் தெரு. உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனல்